Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-03 17-05-2005 செவ்வாய்க்கிழமை ஓசை 88


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்
T.P: 024-222 4247 (சி-11901)

## ஜே.வி.பி, ஹெல உறுமய மீது சனாதிபதி சாடல்

# பொதுக்கட்டமைப்பை எதிர்ப்போர் மாற்றுத்திட்டத்தை முன்வைக்குக!

## பிள்ளைகளை யுத்தத்திற்கு அனுப்ப தயாரா? எனவும் கேள்வி



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படக்கூடாது எனக் கூறும் ஜே. வி .பியும், ஜாதிகஹெல உறுமயவும் மாற்றுத்திட்டங்களை முன்வைக்கவேண்டும் அல்லது அவர்கள் யுத்தம்ஒன்றுக்குத்தயாராக இருந்தால்முதலில்அவர்களும், அவர்களின்பிள்ளை களும் முன்வருவார்களாக இருந்தால் அவர்களுக்கு யுத்தப்பயிற்சியளிக்கத் தாம் தயார் என சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். நேற்றிரவு சுனாமியின் பின்னரான பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக நாட்டு மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் சிறிலங்கா தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியில் செவ்வியளித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

பிரிவினையை வலியுறுத்தி நின்ற விடுதலைப்புலிகள் இயக்கம் இன்று அரசாங்கத்துடன் இணைந்து இலங்கையின் இறைமைக்குப் பங்கம் ஏற்படாத வகையில் பணியாற்றும் வகையில் சுனாமி பொதுக்கட்டமைப்புக்கு உடன்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ளாத சில் குறிப்பிட்ட பொதுக்கட்டமைப்புக்கு மாற்றுத் திட்டம் எதனையும் முன்வைக்காமல் சத்தமிடுகின்றனர். கடந்த 50 ஆண்டுக்காலப்பகுதியில் தமிழர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்படாமை காரணமாக அவர்கள் இலங்கையின் அரசாங்கங்கள் மீது நம்பிக்கை இழந்து காணப்படுகின்றனர். இது யதார்த்தமானது. 1983 ஆண்டு இனவன்முறைக்குப் பின்னர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 220 கோடி டொலர் நிதி உதவிக்கு உதவி வழங்கும் நாடுகள் இணக்கம்

### முதல் நாள் மாநாட்டின் இறுதியில் நிதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு).

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் முதலாவது நாளான நேற்றைய தினம் இலங்கைக்கு 220 கோடி டொலரிற்கும் அதிகமான தொகையை வழங்குவதற்கு இணங்கியதாகவும் இதில் 60 சதவீதமான பணத்தினை நன்கொடையாக வழங்கவுள்ளதாகவும் நிதியமைச்சர் சரத் அமுனுகம கூறியுள்ளார்.

கண்டியில் நேற்று ஆரம்பமான இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டின் முதல் நாள் நிறைவடைந்ததை அடுத்து பத்திரிகையாளரிடம் கருத்துக் கூறும் போது சரத்அமுனுகம இவ்வாறு கூறினார். (12ஆம் பக்கம்பார்க்க)



கண்டி மாநாட்டின் ஆரம்பத்தில்...

## திருமலை நகரில் இரவோடிரவாக நிறுவப்பட்ட புத்தர்சிலை!

### ஹர்த்தாலுக்குத் தமிழ்மக்கள் பேரவை அழைப்பு

திருகோணமலை நகரில் இன்று ஹர்த்தால் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு தமிழ்மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது. திருகோணமலை நகரின் மத்தியில் புத்தர் சிலை ஒன்று நிரந்தரமாக நிறுவப்பட்டதையடுத்தே இந்தக் ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவில் திருகோணமலை பேருந்து நிலையத்தின் முன்னால் 12 அடி உயரமுள்ள புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. தமிழ்மக்கள் செறிந்து வாழும் இந்தப் பகுதியில் புத்தர் சிலை நிறுவப்பட்டது. தமிழ் மக்களின் மனோநிலையைப் பாதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை,இன்று நடத்தப்படவிருக்கும் கதவடைப்பு மற்றும் கண்டனம் தொடர்பாக தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வ. விக்னேஸ்வரன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். தம்மை சமதர்மவாதிகளாகக் காட்டிக்கொண்டு இனவாத பௌத்த மதவெறியர்களாக இந்த இலங்கை தேசத்தைச் சிதைக்கும் முயற்சியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை அரச அதிபரின் உரைக்கு கண்டி மாநாட்டில் பாராட்டு

கண்டியில் நடைபெறும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் உரையாற்றிய முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் அறிக்கை மிகவும் பாராட்டத்தக்க அளவில் காத்திரமாக இருந்ததாக நிதியமைச்சர் அமுனுகம நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். இந்தக் கருத்தை நிகழ்வில் பங்குகொண்ட ஏனைய வெளிநாட்டவர்களும் ஏற்றுக் கொண்டனர் எனவும் அவர் கூறினார். இது தொடர்பில் கருத்துரைத்த முல்லைத்தீவு அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் மக்களின் பிரச்சினைகளை நன்கறிந்த நிலையிலே தமது அறிக்கை மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார். (32)

## முச்சக்கர வண்டிச்சாரதி மட்டக்களப்பில் சுட்டுக்கொலை

(கொழும்பு)

மட்டக்களப்பு இனந்தெரியாதோரால் முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வாடிக்கையாளர் ஒருவரை மட்டக்களப்பு நகரில் இறங்கிவிட்டு தாண்டவன்வெளிசந்தியிலுள்ள தனது முச்சக்கர வண்டித் தரிப்பிடத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்த போது இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொலை செய்யப்பட்டவர் விஸ்வ லிங்கம் அருண்குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் இப்பிர தேசம் பாதுகாப்பு கூடிய பிரதேசமெனவும் அந்த இடம் தொடர்ச்சியாக சிறிலங்கா பொலிசாரும் படையினரும் இணைந்து அடிக்கடி வீதிச்சோதனை நடத்தி வரும் இடம் எனவும் கூறப்படுகின்றது.

## வீரவணக்கம்

இரணைமடுப் பகுதியில் நேற்று முன்தினம் வீதிவிபத்தொன்றின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

லெப்டினன்-செந்தாளன்

(துரைராசா-செல்வகுமார், கே.கே.எஸ்.வீதி, யாழப்பாணம்-த.மு.காந்தரூபன் குடியிருப்பு கோணாவில், கிளிநொச்சி) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி பேசமட்டுமே செய்கிறார் அவரிடம் செயல் எதுவும் இல்லை

### அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கையெழுத்திடுவார் என்ற அவரது அறிவிப்பு மீது நம்பிக்கையில்லை. ஏனெனில் அவர் பேசமட்டுமே செய்கிறார். அவரிடம் செயல் எதுவும் இல்லை. பொதுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தாமல் தொடர்ந்து அது குறித்த அறிகைகளை மட்டுமே ஏன் வெளியிட வேண்டும்? என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் சண்டே லீடர் வாரப்பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.அப்பத்திரிகைக்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

ஆழிப்பேரலைக்குப் பின்னரான கட்டமைப்புப் பணிகளில் அரசு நேர்மையாகச் செயற்படவில்லை. அரசு நேர்மை யாகக் செயற்பட்டிருந்தால் பொதுக்கட்டமைப்பு நடைமுறைச் சாத்தியமாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் இருந்திருக்கும்.

பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா கையெழுத்திடுவார் என்ற அவரது அறிவிப்பு மீது நம்பிக்கை இல்லை. ஏனெனில் அவர் பேச மட்டுமே செய்கிறார். அவரிடம் செயல் எதுவும் இல்லை. பொதுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இரணைமடுவில் விபத்து ஒருவர் பலி; மூவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

இரணைமடுக்குளத்தின் அணைக் கட்டில் உழவு இயந்திரம் ஒன்று தடம் புரண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மூவர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி சம்பவமானது நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் நடைபெற்றுள்ளது. சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, இரணைமடுக் குளத்தின் அணைக் கட்டில் வட்டக்கச்சி நோக்கிச்சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் அதே வழியில் வந்த உந்துருளி முந்திச்செல்ல இடம்கொடுத்த வேளை உழவு இயந்திரம் தடம் புரண்டுள்ளது.

இதன்போது உந்துருளி குளத்தின் உட்பகுதிக்குள் விழுந்துள்ளது. உழவுஇயந்திரம் மறுபக்கம் தடம் புரண்டுள்ளது.

இதில் உழவு இயந்திரப் பெட்டிக்குள் இருந்த செந்தோழன் (வயது 28) என்பவர் காயமுற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு வந்தவேளை அங்கு உயிரிழந்துள்ளார். உழவு இயந்திர சாரதியான ரூபன் மற்றும் உந்துருளியில் பயணித்த அன்புதாசன், நிசாந்தன் ஆகியோர் காயமடைந்துள்ளனர். (கு)

## வரி விளம்பரம்

### 2005-A/L

A/L பரீட்சைக்குரிய பொதுஅறிவு, பொதுஆங்கிலம் உயர்கல்விச்சேவை நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ளது. வன்னியிலுள்ள சகல அறிவமுது புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (6134)

### தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு

மருதநகர் பன்னங்கண்டி வட்டக்கசு பெரியபாலத்திற்கு அருகில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தென்னைநாற்று உற்பத்திப்பகுதியில் தென்னம் பிள்ளைகளை நேரடியாகத் தொடர்பு கொண்டோ அல்லது கிளிநொச்சி பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட செயலகத்தில் தொடர்பு கொண்டோ பெற்றுக் கொள்ளலாம். (6127)

### கருத்தரங்கு

N.E.C A-9 வீதி-கிளிநொச்சி, மாபெரும் தமிழ்க்கருத்தரங்கு 17.05.2005 இன்று காலை9.00 மணிக்கு நடைபெறுகிறது. ஆசிரியர்:- கலாநிதி திருநாவுக்கரசு அவர்களுடன் இணைந்து சு.லோகேஸ்வரன். (6139)

### கண்டெடுப்பு

குனேந்திரதாசன் செல்வமணி உக்கிளாங்குளம், வவுனியா மற்றும் சின்னையா நாகம்மா,மாமூலை, முள்ளியவளை ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## புத்தகக் கண்காட்சியும், மலிவு விற்பனையும் கால நீடிப்பு

கொழும்பு லங்கா புத்தகசாலையின் அனுசரணையுடன் யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினர் மே 07 முதல் நடாத்திவரும் புத்தகக் கண்காட்சி மலிவு விற்பனை, பலரது வேண்டுகோளுக்கிணங்க மேமாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை வரை நீடிக்கப் பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது உங்களது புத்தகத் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளுமாறு அனைவரும் வேண்டப்படுகின்றீர்கள்

மேலதிக விபரங்களுக்கு:-
**தலைவர்,**
**வணிகமாணவர் மன்றம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

(சி.11968)

## University of Jaffna
### Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE)
### Intensive Course in English Language Skills
### Test on English language Skills

The test for all the students who followed the above course (Including those at the Vavuniya centre) will be conducted according to the schedule given below on 04th June 2005

| Subject | Time | Hall |
|---|---|---|
| Listening | 9.30am-10.30am | Kailasapathy Auditorium |
| Reading | 11.00am-1.00pm | Ramanathan Hall<br>Old Canteen Block<br>Management Hall |
| Writing | 2.00pm-4.00pm | Ramanathan Hall<br>Old Canteen Block<br>Management Hall |

IRQUE Project
University of Jaffna.

(சி.11970)

Deputy Director Administr ation

## புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
### பதிவு இல:-எம்/06

## பதவி வெற்றிடங்கள் (தற்காலிகம்)

**01).கணக்காளர்-குறி.இல 104/10 எண்ணிக்கை 01 சம்பளத்திட்டம்4750-100x10-110x10-6850 [சுற்று நிருபம் 31/99 படி]**

**கல்வித்தகைமைகள்:-**

அ) 11 ஆவது சம்பளத்திட்டத்தில் அமைந்த கணக்குப்பதிவினர்,கணக்கு எழுதுனர் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

12 ஆவது சம்பளத்திட்டத்தில் அமைந்த கணக்குப்பதிவினர், கணக்கு எழுதுநர் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப் பதிவினர் நிறுவனத்தில் இறுதிப் பரீட்சையில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்குப் பகுதியில் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப் பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவினர் நிறுவனத்தில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்குப் பகுதியில் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப் பதவியிலான 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த உயர்தரத்தில் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகக் கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கியல் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப் பதவியிலான 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**02).அலுவலக வேலை உதவியாளர்:- குறி.இல 317/16 எண்ணிக்கை 01 சம்பளத்திட்டம் 3250-60x10-65x10-4500 (சுற்றுநிருபம் 31/99 படி)**

**கல்வித்தகைமை:-**

அ). 17 ஆவது சம்பளத்திட்டத்தில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும், ஐந்தாம் வகுப்புச் சித்தியும்.

அல்லது

ஆ). 8ஆம் வகுப்புச் சித்தி.

* வயதெல்லை 18-45
* விண்ணப்ப முடிவுத் திகதி 25.05.2005
* விண்ணப்பங்கள்யாவும் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படவேண்டும். விண்ணப்பத்துடன் கல்வித்தகைமைச் சான்றிதழ், வதிவிடஉறுதிப்படுத்தல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்பவற்றின் நிழல்பிரதி இணைக்கப்படவேண்டும்.

தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ள பணியாளர்களின் வயதெல்லை ஏற்புடையதாகாது. என்பதுடன்,விண்ணப்பப்படிவங்கள் சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

முக்கிய குறிப்பு:-
கணினிப்பயிற்சி பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(6140)

முகவரி:-
தலைவர்,
புது/ப.தெ.வ.அ.கூ சங்கம்
8ஆம் வட்டாரம்,மந்துவில்,
புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு.

## கேள்வி கோரல்

### வீடமைப்பு மற்றும் கைத்தொழில் நிர்மாண கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு
### கட்டடத் திணைக்களம்

01.பருத்தித்துறை, பிரதேச செயலகக் கட்டடம், கட்டம்II முதல் பகுதி நிர்மாண வேலைகளுக்கான பொறியிடப் பட்ட கேள்விகளைக் கட்டடத் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் கோருகிறார். 2005.06.09 ஆம் திகதி மு.ப.10.00 மணிவரை மாத்திரம் கேள்விகள் பெற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாணம்,கடற்கரைவீதி,கட்டடத் திணைக்களம் , பிரதமபொறியலாளர் அலுவலகத்தில் (யாழ்ப்பாணம்) 2005.06.03. ஆம் திகதி பி.ப.3.30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமான ரூபா ஆயிரம் ( ரூபா.1000/-) செலுத்திப்பெற்றுக் கொண்ட ஆவணங்களில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

02.தகைமையுள்ள கேள்விதாரர்கள் பின்வரும் தகைமைகளுக்கமைய இணங்கல் வேண்டும். தரம் M6 அல்லது அதற்கு மேல் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) அபிவிருத்தி செய்யப்பட்ட தேசிய பதிவு மற்றும் நிர்மாண ஒப்பந்தகாரர்களின் தரப்படுத்தல் திட்டத்தின் கீழுள்ள கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் மற்றும் இலங்கை தேசிய நிர்மாணத்துறை சங்கத்தின் (NCASL) அங்கத்துவத்தையும் கேள்விதாரர்கள் பெற்றிருத்தல்வேண்டும். கேள்வி ஆவணங்கள் வழங்கப்பட முன் ஒப்பந்தகாரர்களின் பதிவும் புத்தக மற்றும் (NCASL) இன் அங்கத்துவ அட்டையையும் விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03.கேள்வி ஆவணங்களை, யாழ்ப்பாணம், கடற்கரை வீதி,கட்டடங்கள் திணைக்களம், பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் (யாழ்ப்பாணம்) இலவசமாகப் பார்வையிடலாம்.

04.கேள்விகள் மூடப்படும் திகதியில் இருந்து 90 நாள்கள் வரை கேள்விகள் செல்லுபடியாகும்.

05.கேள்விப் பிணையான ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் (150,000/-)மாத்திரம் சேர்த்துக் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

06.கேள்விகள் மூடப்படும்நேரத்திற்கு முன்பு கிடைக்கக்கூடிய வாறு பத்தரமுல்ல "செத்சிரிபாய" கட்டடத் திணைக்களம் கேள்விச்சபை தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாகவோ பொறியிடப்பட்ட கேள்விகளைக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

07.கேள்விகள் மூடப்பட்ட பின் உடனடியாக பத்தரமுல்ல செத்சிரிபாய , இரண்டாம் மாடியிலுள்ள கட்டடத்திணைக்களத்தின் ஒப்பந்தக் கிளையில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகம் அளிப்பதற்கு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

08.தாமதித்துக் கிடைக்கப்பெறும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது எனவும் மற்றும் பாதுகாப்பு பரிசீலனைக்கு கேள்வி மூடப்படுவதற்கு நிரலிடப்பட்டுள்ள நேரத்திற்கு ஆகக்குறைந்தது ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் செத்சிரிபாய வளவை வந்தடைதல் வேண்டும் என கேள்விதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

09.மேலதிக விபரங்களுக்காக தயவுசெய்து பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்).கட்டடத் திணைக்களம், கடற்கரைவீதி,யாழ்ப்பாணம். தொடர்பு கொள்ளவும்.

**W.S மொல்லிகொட,**
**கட்டடப் பணிப்பாளர்,**
**கட்டடத்திணைக்களம், "செத்சிரிபாய",**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர,**
**கோட்டே,பத்தரமுல்ல.**

(சி.11897)

**www.buildings.gov.lk**



ஈராக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள கொண்டலிசாரைஸ் குர்திஷ் தலைவர் மசூட் பர்சானி, மற்றும் அமெரிக்கப் படையினரிடையே காட்சி தருகிறார்.

# ஒரே இரவில் அனைத்தும் மாறிவிடமாட்டாது சட்டத்தைப் பாதுகாக்க மக்கள் முன் வரவேண்டும்

## கொண்டலிசாரைஸ்

(பாக்தாத்)

*இறையாண்மை கொண்ட ஒரு அரசு பதிவியேற்று சில மாதங்களேயான நிலையில் ஒரே இரவில் அனைத்தும் மாறிவிடாது சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்க ஈராக் மக்கள் முன்வரவேண்டும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலிசாரைஸ் தெரிவித்துள்ளார்.*

ஈராக்கில் தொடர்ந்து வன்முறைகள் இடம்பெற்றுவருகின்ற நிலையில் அமெரிக்க வெளியுறவுத்துறைஅமைச்சர் கொண்டலிசா ரைஸ்- திடீர் விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் பாக்தாத் சென்றார்.

ஈராக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு பதவியேற்ற பின்னர் பாக்தாத் சென்றுள்ள முதலாவது வெளிநாட்டமைச்சர் ரைஸ் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விஜயத் தின்போது ஈராக் பிரதமர் இப்ரகிம்-அல்ஷகாரி துணைப் பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார். ஈராக்கில் தொடர்ந்து வன்முறைகள் அதிகரித்து வருவது குறித்துக்கவலைதெரிவித்த கொண்டலிசா ரைஸ், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முன்வருமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்ட ஈராக்கில் பல ஆண்டு களுக்குப் பின்னர் மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட இறையாண்மை கொண்ட ஒரு அரசு பதவியேற்று சில மாதங்களேயான நிலையில் ஒரே இரவில் அனைத்தும் மாறிவிடாத்து என்றும் கொண்டலிசாரைஸ் தெரிவித்துள்ளார்.



*ஈராக்கிற்கு நேற்று முன்தினம் திடீர் பயணம் மேற்கொண்ட ரைஸ் குர்திஷ் மக்கள் அதிகம் வசிக்கும் அர்பில் நகரில் தரையிறங்கி குர்திஷ் தலைவர் மசூத் பர்சானியைச் சந்தித்துப் பேசினார். கடந்த இரண்டு வாரங்களில் தீவிரவாதி களின் அட்டகாசத்தால் ஈராக்கில் 400 இற்கும் அதிகமானவர்கள் பலியாகியுள் ளனர். தீவிரவாதத்தை ஒழிக்க இராணுவம் மட்டும் போதாது. வலுவான அரசும் தேவை என்றார் ரைஸ்.*

## விண்வெளிக்குச்செல்ல 14 பேர் போட்டி

சீனாவும் இப்போது விண்வெளிக்கு ரொக்கெட்டில் மனிதர்களை அனுப்புவதில் அக்கறை காட்டுகிறது மூன்று ஆண்டுகளுக்கு முன் நிபுணர் ஒருவரை விண்வெளிக்கு அனுப்பிவைத்திருந்தது. அடுத்த ஆண்டு மீண்டும் விண்வெளிக்கு ரொக்கெட்டில் ஒருவரை அனுப்புகிறது. இதற்காகப் 14 பேர் போட்டியிடுகிறார்கள் இவர்களில் இரண்டுபேர் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

## பேருந்து விபத்துக்குள்ளானது இருபது பேர் உயிரிழப்பு

வியட்நாமின் டாம்குவாஸ் மாகாணத்தில் பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பேருந்து நூறு அடி பள்ளத்தில் உருண்டு விழுந்ததில் இருபது பேர் உயிரிழந்தனர். நூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பத்து மணிநேரம் போராடி உடல்களை மீட்டனர்.



*தெகிரானில் அமெரிக்க, இஸ்ரேலியப் படைகளுக்கு எதிராக தற்கொலைத்தாக்குதல் நடத்துவதற்கு பயிற்சிபெறக் காத்திருக்கும் 200 இளைஞர், யுவதிகள். அல்லாவைவிட "உயர்ந்தவர் இல்லை" என்ற வாசகத்துடன் பொருந்திய ஆடை அணிந்துதிருப்பதைக் காணலாம்.*

## ஈராக்கின் முக்கிய தீவிரவாதி அபுமுசாப் காயமடைந்தார்?

ஈராக்கின் மிக முக்கிய தீவிரவாதி அபுமுசாப் அல்-சர்காவி படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ந்த பின் சிறிது காலம் அமெரிக்காவின் நிர்வாகத்தின் கீழ் ஈராக் செயற்பட்டது. அதன் பிறகு கடந்த சனவரியில் நடந்த தேர்தலில் ஈராக் அதிபர் மற்றும் பிரதமர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஈராக்கிலுள்ள அனைத்து வெளிநாட்டுப்படைகளும் வெளியேறக்கோரி அல்-குவைதாவின் ஆதரவுபெற்ற ஜோர்தான் நாட்டில் பிறந்த அபு முசாப் அல் சர்காவி தலைமையில் தற்கொலைப் படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர். அபு முசாப் தலைமையிலான கெரில்லாக் கள் ஈராக்கில் தினசரி கார்க்குண்டு வெடிப்புக்களை நடத்தி ஆயிரக்கணக் கானவர்களைக் கொன்றுள்ளனர். அபுமுசாப்பைப் பிடித்துத் தருவோருக்கு 100 கோடி ரூபாய் வெகுமதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் படுகாயமடைந்த அபுமுசாப் கடந்த வாரம் ரமாடி நகரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக வைத்தியர் ஒருவர் தெரிவித்துள்ளார். பலத்த பாதுகாப்புடன் வந்த அபுமுசாப் காயங்களுக்கு சிகிச்சைபெற்று உடனடியாக வெளியேறிவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஈராக் பாதுகாப்புப் படையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



*ஈரான் அணுவாயுதங்களை உற்பத்திசெய்வதாகக் கடந்த 13ஆம் திகதி இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் சில்வனஷாலன் கூறியிருக்கும் நிலையில் ஈரானி லுள்ள இமாம் கொமெய்னி சர்வதேச விமான நிலையத் தின் தோற்றம்.*

## தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்ட 600 நேபாள மாணவர்கள் மீட்பு

(காத்மண்டு)

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் மாவோயிஸ்ட் தீவிரவாதி களால் கடத்திச் செல்லப்பட்ட 600 பாடசாலை மாணவர்களை இராணுவம் ஞாயிற்றுக்கிழமை மீட்டுள்ளது.

மயாகடி மாவட்டத்தின் மிஸ்கோட் பகுதியிலுள்ள கிராமப்புறப் பாடசாலைகளைச் சேர்ந்த 600 மாணவர்களுக்கு மாவோயிஸ்ட் தத்துவங்களைப் போதிப்பதற்காகக் கடத்திச் சென்றனர். இராணுவம் அங்கு சென்று மாணவர்களை மீட்டுள்ளது.

இதேவேளை நேபாளத்தின் ஏழு கட்சிகள் சேர்ந்து அமைத்த மக்கள் முன்னணி என்ற அமைப்பின் பல்பா மாவட்டச் செயலர் சக்ரவியூகதாபா என்பவரை மாவோயிஸ்டுகள் கடத்திச் சென்றனர். அவரை விட்டுவிடும்படி அந்த ஏழு கட்சிகளும் கேட்டுக் கொண்டுள்ளன.

தங்கள் கட்சித் தொண்டர்களை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இப்படி அடிக்கடி கடத்திச் செல்வதை அவர்கள் குறை கூறினர்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நேபாள அரசு தவறியதால்தான் அங்கு நெருக்கடி நிலையே சமீபத்தில் அமுல் செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



*காசாப்பகுதியிலுள்ள குவார்ட்ரன் குடியிருப்புப் பகுதியில் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ள இஸ்ரேலியத் துருப்பினர்.*

## ஆசிய-பசுபிக் நாடுகளில் 95 இலட்சம் அடிமைத் தொழிலாளர்

உலகம் முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் ஆசிய-பசுபிக் பகுதி நாடுகளைச் சேர்ந்த அடிமைத்தொழிலாளர் எண்ணிக்கை 95 இலட்சம் என மதிப்பிடப் பட்டுள்ளது. இதையடுத்து இரண் டாவதாக இடம்பெற்றுள்ள இலத்தீன் அமெரிக்காவின் எண்ணிக்கை 13 இலட்சம் என உலக வர்த்தக அமைப்பின் அறிக்கையில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் 1.23 கோடிக்கும் அதிகமானோர் அடிமைத் தொழி லாளர்களாக உள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது. இதில்50 சதவீதம் குழந்தைகள் இந்த அடிமைத் தொழிலாளர்களின் உழைப்பால் ஆண்டொன் றுக்கு நடைபெறும் வர்த்தகத்தின் மதிப்பு சுமார் 1.4 இலட்சம் கோடி என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.





*பாக்தாத்துக்கு 320 கிலோமீற்றர் தொலைவிலுள்ள றொமனா கிராமத்தில் அமெரிக்கப்படைகள் நடத்திய எட்டுமணித்தியால சோதனையின்போது கிளர்ச்சியாளர்களுடன் நடந்த மோதலில் படையினரின் சேதமடைந்த டாங்கி ஒன்றை அவதானிக்கும் மக்கள் கூட்டம்.*

## உஸ்பெகிஸ்தானில் தொடரும் வன்முறை மக்கள் எல்லைப்பகுதிகளுக்கு நகர்வு!

மத்திய ஆசியப் பகுதியான உஸ்பெகிஸ்தானில் தொடர்ந்து வன்முறை நீடிப்பதால் பொதுமக் கள் எல்லைப்பகுதியை நோக்கிச் சென்றவண்ணமுள்ளனர். இருப்பினும் தலைநகர் அந்திஜா னில் கடந்தவாரம் இடம்பெற்ற பெரும் பரபரப்பிற்குப் பின்னர் தற்போது அமைதி ஏற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடைகளும், வர்த்தக நிலையங் களும் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளன. சிறிது சிறிதாக இயல்பு வாழ்க்கை திரும்பிவரு கின்றது. தீவிரவாதிகள் நகரி லிருந்து வன்செயலில் ஈடுபடாமல் இருக்க இராணுவத்தினர் நகரின் முக்கிய பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்றும் வன் முறைக்கு தடைசெய்யப்பட்ட இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பே காரணம் என்றும் உஸ் பெகிஸ்தான் சனாதிபதி தெரிவித் துள்ளார்.

இதேவேளை உஸ்பெகிஸ் தானில் தற்போதுள்ள நிலைமை குறித்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உஸ்பெகிஸ்தான் சனாதி பதியுடன் தொடர்பு கொண்டு கேட்டறிந்துள்ளார். தலிபான் போன்ற தீவிரவாத அமைப்பு இந்தக் கலவரத்தில் தொடர்பு கொண்டிருப்பதாக ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.





லெப் .கேணல் நவம் அவர்களின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் போராளிக்கலைஞர் இதயராஜின் மிருதங்க அரங்கேற்றத்தையும், விழிப்புலன் இழந்த போராளி பிறையாளனால் உருவாக்கப்பட்ட தலைவரின் சிந்தனைகள் அடங்கிய நூல் வெளியீட்டினையும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்ட பெருந்திரளான போராளிகள், பொதுமக்கள் கலைஞர்களையும் படங்களில் காணலாம். (படங்கள் – இ.சசி)

# தாயகம் திரும்பியோர் படகு கடலில் விபத்து ஏழு பேர் காணாமல் போயினர்

**தமிழ்நாட்டிலிருந்து கடல் வழியாக தாயகம் திரும்பிக்கொண்டிருந்த 14 ஈழத்தமிழ் அகதிகளில் பெண்கள், குழந்தைகள் உட்பட ஏழு பேர் கடல் அலையில் சிக்கி உயிரிழந்திருக்கலாமென அஞ்சப்படுகின்றது.**

கடந்த சனிக்கிழமை இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடி படகொன்றில் 14 ஈழத்தமிழ் அகதிகள் தாயகம் திரும்பிக்கொண்டிருக்கையில் இவர்கள் பயணம் செய்த படகு பாரிய கடல் அலையில் சிக்கிக் கவிழ்ந்ததாகவும், இவர்களில் ஏழு பேர் நீந்தி மணல் திட்டியொன்றைச் சென்றடைந்து உயிர் தப்பியதாக இந்தச் சம்பவம் தொடர்பாக தெரிவிக்கப்படுகின்றது. மணல் திட்டியில் காணப்பட்ட இந்த ஏழு பேரின் அவலக்குரல் கேட்டு சிறிலங்கா கடற்படையினர் அந்த இடத்திற்குச் சென்று இவர்களை மீட்டு தலைமன்னார் பொலிசில் ஒப்படைத்துள்ளனர். மன்னார் மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பேரில் இவர்களில் ஐந்து பேர் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இந்திய மீன்பிடி படகோட்டிகள் இருவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பொலிசாருக்கு அளித்தவாக்கு மூலத்தின் அடிப்படையிலேயே ஏழு பேர் காணாமல் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

# மூன்று பொதுநோக்கு மண்டபங்கள் பச்சிலைப்பள்ளியில் திறந்து வைப்பு

(வடமராட்சி கிழக்கு)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் மூன்று பொதுநோக்கு மண்டபங்கள் கடந்த 11ஆம் திகதி கிளி.அரசஅதிபர் இராசநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

முதலாவது மண்டபம் இயக்கச்சி கோயில் வயல் கிராமத்தில் நண்பகல் 12.30 மணிக்கும் இரண்டாவது மண்டபம் பளை முல்லையடி வண்ணாங்கேணியில் மாலை 2.30 மணிக்கும், மூன்றாவது மண்டபம் புலோப்பளைக் கிழக்கில் இரவு 8.00 மணிக்கும் திறந்து வைக்கப்பட்டன.

மேற்படி மூன்று மண்டபங்களும் கிளி.அரசஅதிபரின் நிதியில் அமைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வுகள் யாவும் அந்தந்தக் கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

முதலில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வுகளில் தமிழீழ தேசியக் கொடியினை பளைக்கோட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் கரிகாலன் ஏற்றிவைத்தார். இந்நிகழ்வுகளில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் சிவசிறி, கிளிநொச்சி சுனாமித்திட்ட இணைப்பாளர் புத்திசிகாமணி, அக் கிராமங்களின் மக்கள் எனப்பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(11)

# நியாப்-2 வேலைத்திட்டங்களை விரிவாக முன்னெடுக்க முயற்சி

(ஒட்டுசுட்டான்)

நியாப் திட்டம் இரண்டின் வேலைத் திட்டங்களை விரைவாக முன்னெடுக்கும் நோக்குடன் முல்லை.மாவட்ட நியாப் திட்டத்தினர் கிராமங்களில் சென்று பகுப்பாய்வு நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த ஒன்பதாம் திகதி தொடக்கம் கற்குவாரி, நீதிபுரம்,பனிக்கன் குளம், திருமுறிகண்டி, புலிமச்சிநாத குளம், கரிப்பட்டமுறிப்பு ஆகிய இடங்களில் முல்லை.மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் எந்திரி சு.சிவகுமார் தலைமையில் நடைபெற்றுவரும் பகுப்பாய்வில் கருத்துரைகளை ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி. சுபாசினி கந்தையா, பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி.இராஜலட்சுமி, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதேச இணைப்பாளர் து.ஜெயராகுலன், பிரதேசப் பொறுப்பாளர் நாகமைந்தன், விவசாய போதனாசிரியர் லக்ஸ்மன் ஆகியோர் வழங்கி வருவதுடன் கணிப்பீடுகளையும் செய்து வருகின்றனர்.

நேற்று முதல் ஒட்டுசுட்டான் கமநலசேவை பிரிவுகளிலும், 21ஆம் திகதிமுதல் 27ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு உதவி அரசஅதிபர் பிரிவிலும், 28 முதல் ஜூன் 1ஆம் திகதி வரை கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவிலும் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் பகுப்பாய்வுகள் நடைபெறவுள்ளதென எந்திரி சு.சிவகுமார் தெரிவித்துள்ளார். (5)

# ஏ-9 பிரதானசாலையில் அழிந்த நிலையில் பாதசாரிகள் கடவைக் குறியீடுகள்!

## -விபத்துக்களும் சம்பவிக்கின்றன

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப்பகுதியை ஊடறுக்கும் ஏ-9 பிரதான வீதியில் பாதசாரிகள் வீதியைக் கடக்க போடப்பட்டிருந்த வீதிக்குறியீடுகள் சில அழிந்த நிலையில் உள்ளதால் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

மேற்படி பிரதானவீதியில் ஏற்கனவே போடப்பட்டிருந்த பாதசாரிகள் கடவைக்குறியீடுகள் அழிந்த நிலையில் காணப்பட்டதனால் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக ஒரு விபத்து ஏற்பட்டுள்ளது. பாதசாரிகள் கடவைக்கோட்டினூடாக வீதியை கடந்த இளம்பெண் ஒருவர் மீது உந்துருளி மோதியதில் அவர் காயங்களுக்குள்ளானார். இவ்விபத்து கடவைக்கோடு அழிந்துபோன நிலையில் இருப்பதால் நேரிட்டிருக்கலாம்.

இவ்வாறான விபத்துக்கள் ஏற்பட வீதிக்குறியீடுகளும் முக்கியபங்கு வகிக்கின்றன.

எனவே முக்கிய இடங்களில் குறியீடுகள் அமைப்பதும் அவ்வாறு அமைக்கப்பட்டவற்றைத் தொடர்ந்தும் பேண வேண்டிய பொறுப்பும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உள்ளது. தொடர்ந்து இவற்றை நடைமுறைப்படுத்தி வருகின்றபோது விபத்துக்களைக் குறைக்கமுடியும். (கு)

# தையல் கண்காட்சி

(வட்டக்கச்சி)

கண்டாவளைப் பிரதேச செயலக அனுசரணையுடன் கல்மடுநகர், இராமநாதபுரம் கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தையல்க் கண்காட்சி கல்மடுநகர் கிராம சேவையாளர் தலைமையில் இடம்பெற்றது. தையல்பயிற்சி பெற்ற மாணவிகளின் தையற் பொருட்கள் அழகான முறையில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. இதனைப் பெருமளவான மக்கள் பார்வையிட்டனர். பிரதம விருந்தினராகக் கண்டாவளைப் பிரதேச செயலாளரும், சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கண்டாவளைப் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர், முன்னாள் கிராம சேவையாளர், கண்டாவளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை அதிபர் ஆகியோரும், கௌரவவிருந்தினராக வட்டக்கச்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடர் ஆகியோர் கலந்து கொண்டனர். சித்தியடைந்த மாணவிகளுக்கு சிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (12)

# நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன செயற்றிட்ட பகுப்பாய்வுக் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வும், செயற்றிட்ட செயற்பாடுகள் பகுப்பாய்வு சம்பந்தமான கருத்தரங்கும் கடந்த சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சியில் நிறைவேற்றுப்பணிப்பாளர் ந.க. இரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் நலவாழ்வு நிறுவன உள்ளூர் பணிமனை உறுப்பினர்கள், இணைப்பாளர், கொழும்பு பணிமனை இணைப்பாளர், உலகளாவிய கிளை நிறுவனங்களான இங்கிலாந்து, நோர்வே, மலேசியா பிரதிநிதிகளும் பங்குபற்றி பங்களிப்பும், ஆலோசனையும் வழங்கினர்.

இக்கலந்துரையாடலில் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். அத்தோடு திலீபன் மருத்துவமனை வைத்திய ஆலோசகர், தமிழீழ சுகாதாரசேவைப் பணிப்பாளர், [illegible]வனத்தின் செயலாளரான கிளி[illegible] [illegible]ரதி மாகாண சுகாதாரசேவைகள், பிரதிப்பணிப்பாளர், கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி, கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி, முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோர் உட்பட பல வைத்திய கலாநிதிகள் கலந்து கொண்டு கருத்துரையும், ஆலோசனையும் வழங்கினார்கள். மேற்படி கலந்துரையாடலில் நிறுவனத்தின் வடகிழக்கு பிராந்தியத்தில் சுனாமி அனர்த்த செயற்பாடுகள், நடமாடும் மருத்துவசேவை, நலன்புரி நிலைய செயற்பாடுகள் பற்றிய மீளாய்வும் எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இச்செயலமர்வில் வெளிநாடுகளில் இருந்து வருகைதந்த வைத்திய கலாநிதிகள் அறிவுரைகள் செயற்பாட்டுத்திட்டங்கள் சம்பந்தமான தங்களின் விரிவான பங்களிப்பை ஆற்றி சேவை மேம்பாட்டிற்கு உதவியும், ஊக்கமும் அளித்துள்ளார்கள்.


சுகாதார மேம்பாடு, வைத்திய சாலை வசதி மேம்பாடு , சுனாமி இடம்பெயர் மக்கள்சேவை மேம்பாடு, நடமாடும் வைத்தியசேவை மேம்பாடு போன்றவற்றின் செயற்பாடுகள் சம்பந்தமாக விரிவான செயற்றிட்டம் இனங்காணப்பட்டு நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு நிறுவனத்தின் செயற்பாட்டு விளக்க கைநூல் நிறுவனத் தலைவரால் வெளியிடப்பட்டது. இதன்முதற பிரதியை அரசியல்துறைப் பொறுப்பாளர் பெற்றுக் கொண்டார்.

# திட்டமிடல் குழுக் கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வன்னித் தேர்தல் மாவட்ட திட்டமிடல் குழுக் கூட்டம் கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் வவுனியா அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகியது.

வன்னித் தேர்தல் மாவட்ட திட்டமிடல் குழுத்தலைவர் றிஷாத் பதியுதீன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சதாசிவம் கனகரட்ணம், வினோநோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் சிவநாதன்கிஷோர் ஆகியோரும், வவுனியா அரசஅதிபர் சி.சண்முகமும் கலந்துகொண்டனர். (10)



*கிளிநொச்சி கனகபுரம் வீதிக்கு குறுக்காக நீர்க்குழாய் பொருத்துவதற்காக தோண்டப்பட்டகிடங்கு இதுவரையும் செப்பனிடப்படாமல் இருப்பதை படத்தில் காண்கிறீர்கள். இதனால் அதனூடாகப் பயணிக்கும் மக்கள் படும்சிரமம் ஏராளம். அத்துடன் வீதி விபத்துக்களும் அதிகம் ஏற்பட்டுள்ளன. இது போன்றுதான் கிளிநொச்சியில் ஒவ்வொரு கிளை வீதியிலும் கிடங்குகள் தோண்டப்பட்டு மூடப்படாமல் உள்ளன. இதனைச் செப்பனிட்டு போக்குவரத்தைச் சீர் செய்து தரும்படி உரியவர்களிடம் மக்கள் வேண்டுகின்றனர். (படம்:குகன்)*

# சிறிலங்கா கடற்படையின் கெடுபிடிகளை உடன் நிறுத்த நடவடிக்கை வேண்டும்

## -மண்டைதீவு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மண்டைதீவு மக்கள் சிறிலங்கா கடற்படையினரால் எதிர்கொள்ளும் நெருக்குவாரங்களைத் தீர்த்துவைக்க உடன் நடவடிக்கைகளை எடுக்குமாறு அப்பகுதி கடற்றொழிலாளர்கள் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் கோரியுள்ளனர்.**

மண்டைதீவில் தற்போது சுமார் 300 குடும்பங்கள் குடியேறிவாழ்ந்து வருகின்ற போதும் பொதுமக்கள் மீதான கெடுபிடிகளையும், கட்டுப்பாட்டு விதிமுறைகளையும் படையினர் இன்னமும் தளர்த்தவில்லை.

கடற்றொழில் கட்டுப்பாட்டுமுறை. போக்குவரத்துக்கெடுபிடி, இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலய கெடுபிடியென மக்கள் மீது கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. இதனால் இப்பகுதி மக்கள் தமது இயல்புவாழ்வு, அடிப்படை உரிமைகள் என்பனவற்றை இழந்து வாழ்கின்றனர் என்பதைச் சுட்டிக்காட்டி மகஜர் ஒன்றையும் கண்காணிப்புக்குழுவினரிடம் கையளித்துள்ளனர். (33)

# காசநோய் வைத்தியசாலை பண்ணைப் பகுதியில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்குரிய காசநோய் வைத்திய நிலையம் அடுத்தமாதம் யாழ்.பண்ணைப்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட காசநோய் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சி.ஜமுனானந்தா தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் 18.4 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வைத்தியசாலையில் காசநோய்க்கான நவீன சிகிச்சைமுறை வசதிகள் ஏற்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் காசநோய் வைத்தியசாலை ஒன்று இல்லாமையால் நோயாளர்கள் எதிர்கொண்டுவந்த வீண் உயிரிழப்புக்கள், வீண்அலைச்சல்கள், பணவிரயம் என்பனவற்றினைக் கவனத்தில் கொண்டே இது துரிதகதியில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் இனி வரும் ஜூன்மாதம் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (33)

# வலிகாமம் மேற்கில் எழுபது வீடுகள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ்.வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் 70 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பகுதியில் மிகவும் பின்தங்கிப் போயுள்ள செம்மணத்தி, ஊரத்தி முன்கோட்டை, மூளாய் ஆகிய கிராமங்களிலேயே இவ் 70 வீடுகளும் அமையவுள்ளன.

இக்கிராமங்களில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நலன்கருதியே இவ் வீடுகள் அமைக்கப்படுகின்றன. (33)

# விலங்கு விசர்நோயைக் கட்டுப்படுத்த பிரதேச சபைகளின் ஒத்துழைப்புத் தேவை

## பி.மா.சு.சே பணிப்பாளர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் .குடாநாட்டில் விலங்கு விசர் நோயைக்கட்டுப்படுத்துவதற்கு சகல பிரதேசசபைகளினையும் சேர்ந்த அதிகாரிகளின் ஆக்கபூர்வமான பங்களிப்புகள் அவசியமென பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் விலங்குவிசர் நோயின் பரம்பல் தற்போது அதிகரித்துள்ளது. குறிப்பாக கடந்த வருடத்தில் மட்டும் விலங்கு விசர் நோய்த் தொற்று நோய்களுக்குள்ளான நாய்களினால் சுமார் 1250 பேர் கடியுண்டுள்ளனர்.

எனவே விலங்கு விசர்நோய்களின் தாக்கங்களில் இருந்து பொது மக்களைக் காத்துக் கொள்வதற்காக விலங்குவிசர் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

இதற்கு பொதுச்சுகாதார பிரிவினரது நடவடிக்கைகள் மட்டுமன்றி பிரதேச சபைகளின் அதிகாரிகளது ஒத்துழைப்பு மிக அவசியமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (33)

# கச்சாயில் வீடு புகுந்து பணம்,நகைகள் கொள்ளை!

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகர தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வீட்டில் வெள்ளிக்கிழமை இரவு கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் பிரதானசாலையில் உள்ள இவருடைய வீட்டில் இரவு பின்கானி வழியாக உள்ளே நுழைந்த கொள்ளையர்கள், முன்விறாந்தையில் குடும்பத்தவர்கள் தூங்கிக்கொண்டிருந்த பொழுது ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்ளே சென்று 25 பவுண் தங்கநகைகளையும், இரண்டு இலட்சம் ரூபா ரொக்கப்பணத்தையும், படப்பிடிப்புக்கருவி ஒன்றையும் கொள்ளையடித்து சென்றிருப்பதாகத் தெரியவருகிறது. இது குறித்து சாவகச்சேரி பொலிசார் வழக்குப்பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (28)

# கடுகதிப் பேருந்து சேவையில் மேலுமொரு பேருந்து இணைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-முகமாலைக்கு இடையிலான கடுகதிப் பேருந்துச் சேவையில் மேலும் ஒரு கடுகதிப் பேருந்து இணைத்துக்கொள்ளப்படவிருப்பதாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பொது முகாமையாளர் கே.கணேசபிள்ளை தெரிவித்துள்ளார்.

மேற்படி சேவையில் ஈடுபட்டுவரும் பேருந்துகளின் எண்ணிக்கை போதாதுள்ளமையால் பயணிகள் எதிர்கொள்ளும் பயண நெருக்கடிகளைக் கவனத்தில் கொண்டே இப்பேருந்து சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது.

அரைச் சொகுசு வகையிலான இப் பேருந்து எதிர்வரும் 20ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடும். (33)

# நாவற்குழி வடக்கில் வேரடி மண் பாரம்பரிய கலை விளையாட்டு விழா

நாவற்குழி வடக்கில் வீரபத்திரர் கோயிலடி மாதர் குழுவும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து கடந்த வெள்ளி பாரம்பரிய கலை விளையாட்டு விழாவினை நடத்தியது.



திருமதி முத்தையா மங்கையற்கரசி தலைமையில் நடைபெற்ற கலை விளையாட்டு விழாவினில் பிரதம விருந்தினராக செல்வி என் பத்மாவதி (கியூடெக்), திருமதி மேகலிங்கம் வசந்தா தேவி(அதிபர் நாவற்குழி மகாவித்தியாலயம்) தங்கவேல் (தலைவர் விவசாயிகள் சம்மேளனம்) கைதடிப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலை விளையாட்டு நிகழ்வில் பாரம்பரிய விளையாட்டுக்களான கோழி கோட்டான், கபடி மீனும் வலையும், கந்தையாண்ணை, குளம் கரை தொப்பி மாற்றல், கிளித்தட்டு, உருளைக்கிழங்கு பிரட்டல், நாயும் இறைச்சித்துண்டும், சக்கரவட்டம், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல் முதலான விளையாட்டுக்கள் இடம் பெற்றன.

முற்று முழுதாய் இவ்விளையாட்டுக்களில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டனர். (28)

# நடமாடும் சேவை ஊடாக காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு

(அலுவல செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தினரால் நடமாடும் சேவைமூலம் காணிசம்பந்தமான பிரச்சினைகளுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் இன்று காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை மலையாளபுரம் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து மலையாளபுரம் கிராமமக்களுடைய காணிசம்பந்தமான பிரச்சினைகளுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும், இதேபோன்று 19ஆம் திகதியன்று உதயநகர் கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் வைத்து உதயநகர் கிழக்கு கிராமமக்களுடைய நிரந்தரக்காணி உரிமைப் பத்திரம் வழங்கப்படவுள்ளதெனவும் குறிப்பிட்ட தினங்களில் அந்தந்தக் கிராம மக்களை நடமாடும் சேவை நடைபெறும் இடங்களுக்குத் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கரைச்சிப்பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி வேண்டியுள்ளார். (சோ)

# வங்காலையில் மீன்பிடித்துறை வளாகம் துரிதகதியில் வேலைகள் முன்னெடுப்பு

(மன்னார்)

மன்னாரில் மீன்பிடித்துறை வளாகத்தை அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கென வங்காலையில் 75 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டு துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுள்ளன. மேலும் யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆய்வுக் குழு ஒன்று இங்கு விஜயம் செய்து இதற்கான திட்டத்தினைத் துரிதப் படுத்தி வருகின்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் விஸ்வலிங்கம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இவர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். (18)

## பிற்போடப்பட்டது

மாங்குளப்பிரதேசத்தில் செஸ்வராணி குடியிருப்பு வீடுகள்கையளிப்பு நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளன.

மேற்படி வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம் பெறவிருந்தது. எனினும் இந்நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதால் நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்பதனை மாவீரர் போராளிகள்குடும்ப நலன் காப்பகத்தினர் அறியத்தருகின்றனர்.

## கற்சிலைமடுவில் திருட்டுகள் அதிகம்

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடுப் பகுதியில் அண்மை நாட்களாக திருட்டுக்கள் அதிகரித்து வந்துள்ளன. கற்சிலை மடு அ.த.க. பாடசாலையில் உள்ள சூரியமின் கலம் லோகேஸ்வரி என்பவரின் வீட்டில் இருந்த மின்பிறப்பாக்கி, வர்த்தகர் புவனேஸ்வரனின் வீட்டிலிருந்து டெக் என்பன திருட்டுப்போயுள்ளன. (5)

# 13பேருந்துகளின் சேவை இயந்திரக்கோளாறுகளால் நிறுத்தம்


(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கீழ் யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் 13 பேருந்துகள் இயந்திரக்கோளாறுகள் காரணமாக சேவையில் இருந்து விலக்கப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டு மக்களின் பயணத்தேவைகளைப்பூர்த்தி செய்வதற்கு போதியளவு பேருந்துகள் யாழ் மாவட்டத்தில் சேவையில் இல்லாதுள்ள நிலையில் இப் 13பேருந்துகளும் சேவையில் இருந்து விலக்கப்பட்டுள்ளமையால் யாழ். மாவட்டத்தின் அரச பேருந்துகளினுடைய பேருந்துப் போக்குவரத்துச் சேவை திருப்திகரமற்றதாக உள்ளது.

திருத்தம் செய்து பயன்படுத்த முடியாத அளவிற்கு இப் 13பேருந்துகளினதும் இயந்திரம் சீர்குலைந்துள்ளதால் அரசிடமிருந்து புதிய இயந்திரங்கள் கோரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையினர் இது குறித்து அரசு அசமந்தப் போக்குடன் நடந்து கொள்வதாகவும் தெரிவித்தனர். (33)

## சந்திவெளி படுகொலையைக் கண்டித்து தென்மராட்சியில் மாணவர் கறுப்புப்பட்டிப் போராட்டம்



படங்கள்:- ஆன் சிலின்

# வாகனம் படையினரால் சோதனை ஐ.நா சபை குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபைக்குச் சொந்தமான வாகனமொன்றைப் படையினர் சோதனையிட முனைந்தமை தொடர் பில் ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்தியுள்ளது. கட்டைப் பறிச்சான் பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக் கான உயர் ஸ்தானிகராலயத்தின் வாகனங்களை இராணுவத்தினர் சோதனையிட முனைந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் வாகனங்களை இராணுவம் சோதனையிட முடியாதென வாகனத்தில் பயணம் செய்த அதிகாரி தெரிவித்ததை அடுத்து இரு தரப்புக்கும் இடையில் முரண்பாடு தோன்றியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் இராணுவத்தலைமையகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளனர். (32)

# மலையகத்தில் கருத்தடை மூலம் இன அழிப்பு நடவழிக்கை

(கொழும்பு)

மலையகத்தில் கருத்தடை மூலம் இன அழிப்பு மேற்கொள்ளப்படுவதை இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணி கண்டித்துள்ளது.

இது தொடர்பில் அந்த முன்னணியின் நிர்வாகக்குழு தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

தலைவர் டி வி சென்னன் தலைமையில் இடம்பெற்ற நிர்வாகக்குழுக் கூட்டத்தில், மலையக தோட்டப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இனஅழிப்பு நடவடிக்கைகளினால் அங்கு சனத்தொகை பாரிய அளவில் குறைந்து வருவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இதன் காரணமாக பல பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டதாக கட்சியின் செயலர் எஸ்.சதாசிவம் தெரிவித்துள்ளார். (32)

# ஜே.வி.பியைக் கட்டுப்படுத்துவது குறித்து அமெரிக்காவில் ஆலோசனைக் கூட்டம்

(கொழும்பு)

ஜே.வி.பி யின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது குறித்து அமெரிக்காவில் முக்கிய அலோசனைக் கூட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை சனாதிபதியின் ஆலோசகர் மனோதித்தவெல அமெரிக்காவில் தலைமையகங்களைக் கொண்டுள்ள பல முக்கிய அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளுடன் இந்தச் சந்திப்பில் கலந்து ரையாடியுள்ளார்.

இலங்கை சனாதிபதிக்கும், ஜே.வி. பியிக்குமிடையிலான சந்திப்புத் தோல்வி அடைந்த பின்னரே சனாதிபதியின் விசேட பணிப்பின் பேரில் மனோதித்தவெல இந்தச் சந்திப்பினை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.இதன் போது ஜே.வி.பியின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதுகுறித்து ஆராயப்பட்டுள்ளது. (32)

# அபிவிருத்தியை நோக்கி இலங்கை செல்கிறது சிறிலங்கா நிதியமைச்சர் கூறுகிறார்

(கொழும்பு)

இலங்கை அரசியல் மற்றும் ஏனைய பிரச்சினைகளுக்கு மத்தியில் அபிவிருத்தியை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக கண்டி மாநாட்டில் நிதிய மைச்சர் தெரிவித்தார். இதன் அடிப்படையில் நாடு 6.8 வீத பொருளாதார அபிவிருத்தியை அடைந்துள்ளது

ஏற்கனவே சுவிற்சர்லாந்து ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவும் வகையில் ஒப்பந்தங்களைச் செய்துள்ளது.

ஜேர்மன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் விரைவில் ஒப்பந்தங்களை இலங்கையுடன் செய்துகொள்ளவுள்ளன.இந்தியா தமது உதவியை வழங்கி வருகிறது.என்றும் அவர் தெரிவித்தார்

இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு கண்டி ஏர்ல் ரிஜென்சி விருந்தகத்தில் நடைபெற்றது. இதில் பிரதமமந்திரி மகிந்த ராஜபக்ஷவும்பங்கேற்றார்.(32)

# பாலியல்வல்லுறவு வழக்கில் 20 வருட சிறை; தீர்ப்பைக் கேட்ட பிக்கு விசம் குடித்தார்

சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய வழக்கில் 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதைக் கேட்ட பௌத்தபிக்கு நீதிமன்றத்திலேயே விசமருந்தித் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார்.

2001 ஆம் ஆண்டு 16 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக் குள்ளாக்கியதாக பௌத்த பிக்கு மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் நேற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பைக் கேட்ட உடனேயே அவர் விசமருந்தியதாக கொழும்பு உயர் நீதிமன்ற ஊழியர் என்.கே. சிறிபால கூறினார். இதையடுத்து அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பௌத்த பிக்குகளால் சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்படும் குற்றச்செயல்கள் சிறிலங்காவில் அதிகரித்து வருகின்றன. இருந்தபோதும் முதல்முறையாக பிக்குவிற்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. இந்த வழக்கில்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (32)

# தொழிற்சங்க அங்கத்துவங்களை நிறுத்தப்போவதாக அறிவிப்பு

(கொழும்பு)

ஹேவாஹெட்ட முல்லேரியாத் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 350 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமது தொழிற்சங்க அங்கத்துவங்களை நிறுத்திக்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளனர்.

இந்தத் தோட்டத்தின் தொழிலாளர்கள் தமது தோட்டத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வைப்பெற்றுத் தருமாறு பல தடவைகளாகக் கோரியுள்ளனர்.

எனினும் அவர்கள் வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கைகள் எவற்றையும் எடுக்கவில்லை எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தமது அங்கத்துவப் பணங்களை குறித்த தொழிற்சங்கம் ஒன்றிற்கு அனுப்ப வேண்டாமெனத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திடம் கேட்டுள்ளனர். (32)

# இல.யில் எட்டு பாரிய திட்டங்களை ஐ.நா அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கும்

(கொழும்பு)

இலங்கையில் பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் எட்டுக் திட்டங்கள் முன்னெடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மற்றும் , இனமோதல் காரணமாகவும் பாதிக்கப்பட்ட சுமார் 50 லட்சம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் குறித்து ஆராயப்[illegible]ள்ளது.

இதேவேளை நேற்றுக் கண்டியில் ஆரம்பமாகியுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இது தொடர்பில் அரசாங்கம் திட்டம் ஒன்றை முன்வைக்கவுள்ளது. (32)

# மலையகத்தில் மீண்டும் மஞ்சள் மழை பொழிவு

தலவாக்கலை பேரம் தோட்டத்தில் மஞ்சள் நிறத்திலான மழை பெய்துள்ளது பேரம் தோட்டத்தின் இரண்டாம் இலக்க மலையிலேயே இந்த மழை பெய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அக்கரபத்தனைப் பகுதியில் இவ்வாறான மழை பெய்தமை குறிப்பிடத்தக்கது.எனினும் காலநிலை அவதானமையம் இது தொடர்பில் இறுதித்தீர்மானம் ஒன்றுக்கும் வரவில்லை.(32)

# தனியார் மயப்படுத்தலை எதிர்த்து கண்டியில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மலையகத் தோட்டங்களை தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக நேற்றுக் கண்டியில் பிரஜைகள் கண்காணிப்பகம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது. கண்டி மற்றும் கலகா பகுதிகளின் தோட்டங்கள் தனியார் மயப்படுத்தலுக்கு உள்ளாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. அத்துடன் மக்கள் பல்வேறு நடைமுறைப்பிரச்சினைகளுக்கு உட்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் இவற்றை ஆட்சேபித்து கண்டி தொடருந்து மையத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 11 மணிக்கு நடை பெற்றது. (32)




# ஓய்வுபெறுகிறார் இமானுவல்




**பிரான்ஸ்** உதைபந்தாட்ட அணியின் மத்திய வரிசையில் ஆடும் இமானுவல் அண்மையில் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். தனது முழங்காலில் ஏற்பட்ட உபாதை காரணமாகவே அவர் விரைவில் ஓய்வுபெறப்போவதாக தெரிவித்துள்ளார்.

போட்டிகளின்போதே இவருக்கு முழங்காலில் வருத்தம் ஏற்பட்டு மூன்று முறை சத்திர சிகிச்சையும் மேற்கொள் ளப்பட்டது.

தற்போது 34 வயதுடைய இமானுவல் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் பிரேசிலுக்கு எதிராக மூன்றாவது கோலைப் போட்டார். பிரான்ஸ் பிரேசிலை மூன்றுக்குப் பூச்சியம் என்ற கணக் கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றியதில் மூன்றாவது கோல் இவரால் அடிக்கப்பட்டது. இதனை இன்றும் மறக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இமானுவல் தனது 19ஆவது வயதில் பிரான்ஸ் அணியில் இணைந்து சர்வதேசப் போட்டிகளில் நுழைந்ததுடன், 20 வருடகாலத்தில் 63 போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இவர் தேசிய அணிக்காக மட்டுமன்றி மொனாக்கோ, ஆர்சனல், பார்சிலோனா, செல்சியா கழகங்களுக்காகவும் விளையாடியுள்ளார்.




இதைவிட 2000ஆம் ஆண்டு நடைபெற்ற ஐரோப் பியக் கிண்ணப் போட்டியில் பிரான்ஸ் கிண்ணத்தைக் கைப்பற்ற இவரின் பங்களிப்பும் பிரதான இடம் வகித்தது.

எனினும், 2002ஆம் ஆண்டு தென்கொரியாவும், ஜப்பானும் இணைந்து நடத்திய உலகக்கிண்ணப் போட்டி யில் முதலாவது சுற்றிலேயே தனது அணி (பிரான்ஸ்) தோல்வியடைந்ததுடன், சர்வதேச போட்டிகளிலிருந்து விடைபெற்று மட்டுப்படுத்தப்பட்ட கழகங்களுக்கான போட்டிகளில் பங்கேற்றார்.

இவர் தனது 18ஆவது வயதில் மொனாகோ கழகத்துக்காக போட்டியிட்டு 1991ஆம், 1997ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பிரான்ஸ் வெற்றிக்கிண்ணத் தைப் பெற்றுக்கொடுத்தார். 1997ஆம் ஆண்டு ஆர்சனல் அணியில் இணைந்த இவர் உதைபந்தாட்ட கழக (FA) சம்பியன் கிண்ணத்தை மூன்று முறை பெற்றுக் கொடுத்துள்ளார். அதன் பார்சிலோனா அணிக்காக ஒருமுறையும், பின்னர் இங்கிலாந்தின் செல்சியா அணிக் காகவும் ஆடினார். அவர் [illegible] அணியில் 2001ஆம் ஆண்டு முதல் ஓய்வுபெறும் வரை பங்கேற்றார்.

எதிர்காலத்திட்டம் எதனையும் கொண்டிருக்காத இவர் உதைபந்தாட்டத்தை தொழிலாக கொள்ள எண்ணியிருந்தபோதும் திடீரென ஏற்பட்ட உபாதையினால் இவர் அதிலிருந்து ஓய்வுபெற நேர்ந்துள்ளமை வருந்தத்தக்கதே. -

**வடிவேல்**

# ஒளிமயமான எதிர்காலம்




**தென்னாபிரிக்காவா** அது ஒரு அதிர்ஷ்ட மில்லாத அணி. நல்லா விளையாடுவார்கள் கடைசி நேரத்தில் சொதப்பி விடுவார்கள். அதிலும் உலக கோப்பையா கேட்கவே வேண்டாம். திறமையிருந்தும் கைப்பற்ற முடியாத நிலை. அது எல்லாம் அந்தக் காலம் எங்கள் அணிதான் அடுத்த உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என்கிறார் ஸ்மித்.



தென்னாபிரிக்க அணியில் கொடி கட்டிப்பறந்த குரேனியின் காலம் முடிவுக்கு வந்ததும் அணியில் ஏற்பட்ட குழப்பத்துக்கு மத்தியில் அணித் தலைவரானவர் தான் கிரேம் ஸ்மித்.

2002 இல் அவுஸ். அணிக்கு எதிரான போட்டித் தொடரில் அறிமுகமாகி 22 வயதில் தலைவராக பொறுப் பேற்ற போது சில சிக்கல்களை சந்திக்க வேண்டி யிருந்தது. அனுபவ வீரர்களான ரொனால்ட், ரொட்ஸ், கிறிஸ்டன் ஆகியோர் சீரான இடைவெளியில் ஓய்வு பெற்றனர். இத னால் புதியஅணியுடன் போட்டிகளை சந்திக்க வேண்டிய நிலை.

துணிச்சலுடன் பல தொடர்களைச் சந்தித்தார். 2003 இல் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 277, 259 என இரட்டைச் சதங்களை விளாசினார். தொடர்ந்து தொடக்க வீரராக விளை யாடி 2004 விஸ்டன் சிறந்தவீரர் விருதையும் பெற்றார்.

2004 ஆம் ஆண்டு இவருக்கு மோசமான ஆண்டாக அமைந்தது. இந்திய, இலங்கை மண்ணில் டெஸ்ட் தொடர் தோல்வி 12 ஒரு நாள் போட்டி களில் 11 இல் தொடர் தோல்வி என வரிசையாக இறங்கு முகத்தை சந்தித்தார். தொடர்ந்து சொந்த மண்ணில் இங்கிலாந்துடன் வரிசையாக தோல்வி. இதனால் இவர் மனம் தளரவில்லை. ஒரு நாள் தொடரில் வீறு கொண்டு எழ ஆரம்பித்தார். புதிய வீரர்கள் திடீர் எழுச்சி கண்டனர். இவர்களின் எழுச்சி கண்டு பயந்து அனுபவ வீரர்களும் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க அணியின் வளர்ச்சி விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இது மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான டெஸ்ட் ஒரு நாள் தொடரை கைப்பற்றியது சாட்சியாக அமைந்துள்ளது. இதில் டெஸ்ட் தொடரில் மூன்று சதங்களை அடித்த ஸ்மித் ஒரு நாள் தொடரில் முதலாவது போட்டியில் சதமடித்ததுடன் திறமையாக செயற்பட்டு தொடரையும் கைப்பற்றி விட்டார்.

அது மட்டுமல்லாது ஆறு வேகப்பந்து வீச்சாளர்களுடன் (நிட்டினி, நெல், பொலக், லாங்வெல்ட், கெம்ப், கலிஸ்) களமிறங்கி அசத்தியதுதான் முன்பொரு காலத்தில் வேகப்பந்தின் சொர்க்கபுரியான மேற்கிந்தியத்தீவு அணியில் கூட இத்தனை வேகப்பந்து வீச்சாளர்கள் ஒரே நேரத்தில் விளையாடி யிருப்பார்களா என்பது சந்தேகம் தான்.

அடுத்த உலகக் கிண்ணப் போட்டி மேற்கிந்தியத் தீவில் நடக்கவுள்ளது. இதை மனதில் கொண்டு தான் ஆறு வேகப்பந்து வீச்சாளர்களுடன் ஸ்மித் களமிறங்கியுள்ளார் என்பது தெளிவாகிறது.

1992 இல் மழை, 1996, 1999 இல் உதவாத அதிர்ஷ்டம் 2003 இல் மீண்டும் மழை எனதென்னாபிரிக்காவின் உலகக் கோப்பை கனவு ஒவ்வொரு முறையும் தகர்ந்து கொண்டு போனதுதான் வரலாறு. ஆனாலும் 2007 இல் எமது அணி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றுமென தெரிவிக்கும் ஸ்மித். இதன் முதல் கட்டமே எங்களின் கரிபியன் பயணம் என்கிறார்.

ஆனாலும் தான் ஒரு திறமையான அணித்தலைவர் என்பதை மூன்றாவது ஒரு நாள் போட்டியில் ஒரு ஓட்டத்தால் மேற்கிந் தியத்தீவை தோற்கடித்தும் காட்டினார். ஆனால் போட்டித் தடைக்கு உள்ளானார். அது தான் வேதனைக்குரியது. □

# முயற்சி செய்யுங்கள் முன்னேறலாம்

**தமிழர்** தாயகத்தில் எழுச்சி கண்டுவரும் விளையாட்டுத்துறை[illegible] வளர்த்தெடுப்பது அனைவர[illegible] தலை[illegible] கடமையாகும். இதற்கு [illegible]கிறது தமிழீழ விளையாட்டுத்துறை.

கடந்த கால இலங்கை விளையாட்டு



வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் தமிழர் பிரதேசமும் அதன் சார்ந்த வீரர்களுமே பல சாதனைகளையும் வெற்றிகளையும் பெற்றுள்ளனர். உதாரணத்திற்கு ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை சார்பில் உயரம் தாண்டுதலில் முதல் தங்கம் வென்ற டாக்டர் எதிர்வீரசிங்கம் அவர்களைக் குறிப்பிடலாம்.இது பெரும்பான்மை இனத்திற்கு தலைகுனிவாகஅமைந்திருந்தது. பின்னர் தமிழர் காலப்போக்கில் இன ஒடுக்கு முறையால் ஓரம் கட்டப்பட்டு புறக்கணிக்கப் பட்டதால் திறமையான பல வீரர்கள் மாகாண மட்டத்தை தாண்டிச்செல்ல முடியாத நிலையே காணப்பட்டது.

ஒருவாறு தேசிய மட்டத்திற்கு தெரிவாகி விட்டாலும்கூட அவர்கள் ஏதோ ஒரு காரணம் காட்டப்பட்டு வெளியேறும் நிலையே தொடர் நிகழ்வாக இருந்து வந்தது.

இதனால் விரக்தியடைந்த தாயக வீரர்கள் நாம் என்னத்தை சாதித்தும் பலன் இல்லை என்ற முடிவுக்கு வந்தனர். இதனால் விளையாட்டில் இளைஞர்களின் ஆர்வம் குறைந்து போனது.

இந்தக் காலகட்டத்தில் உதயமான தமிழீழ விளையாட்டுத்துறை தாயக வீரர்களை விளையாட்டுத்துறையில் வளர்த்து சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்பதில் அயராது உழைத்து வருகிறது.

இதன் முதல் கட்டமாக வருடாவருடம் தாயகத்தின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய தேசிய ரீதியிலான பெரு விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகிறது.

இத்துடன் நின்று விடாது கால் பந்துக்கென தனியானபோட்டி, கைப்பந்து போட்டி துடுப்பாட்டபோட்டி உள்ளரங்க விளையாட் டுக்களான பூப்பந்து போட்டி, கரம், சதுரங்கப் போட்டிகள் என பல்வேறு போட்டிகளையும் சர்வதேச தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற நோக்கில் முன்னெடுத்து வருகிறது.

இதனை விட விசேட பயிற்சி முகாம்கள் நிபுணத்துவம் பெற்றவர்கள் வரவழைக் கப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றமை விரை வில் சர்வதேச தரத்துக்கு தமிழீழ அணி ஒன்று உருவாகும் என்ற நம்பிக்கையை பல் வேறு மட்டங்களிலும் ஏற்படுத்தியுள்ளது.

இதனால் தாயக இளைஞர்கள் மத்தியில் விளையாட்டில் என்றுமில்லாத ஆர்வம் ஏற்பட் டுள்ளது.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் மாலை வேளைகளில் மைதானத்தில் பல்வேறு விளை யாட்டுக்களிலும் ஈடுபட்டுள்ளமை விளை யாட்டு ஆர்வலர் களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இன்று சர்வதேச அரங்கில் தமிழர் போராட் டத்தின் நியாயத்தன்மை உணரப்பட்டுள்ள நிலையில் சமாதானத்துக்கான சிறந்த ஊட கம் விளையாட்டுத்துறையே என்பதை சிறிலங் காவின் கிரிக்கெட், கால்பந்தாட்ட, மெய்வல்லுநர் சங்கங்கள் உணர்ந்துள்ளன. இது தமிழர் தாயகத்தில் விளையாட்டுத்துறைக்கு கிடை த்த அனுகூலமான செயற்பாடாகும்.

ஏனெனில் சிறிலங்காவின் விளையாட்டுத் துறையில் இவையே மிகவும் செல்வாக்குப் பொருந்திய சங்கங்களாகும். இவை தாயகத்தின் விளையாட்டுத்துறைக்கு உதவுவதாக உறுதி யளித்துள்ளன. இது செயல் வடிவம் பெறுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

எது எவ்வாறிருப்பினும், தாயக வீரர்கள் சர்வதேச தரத்திலான தொழில்நுட்பங்களை அகத்துறிஞ்சி முன்னேறும் பட்சத்தில் தேசிய ரீதியிலென்ன சர்வதேச தரத்திற்கு உயர் வதற்கு கைகொடுக்கத் தயாராகவுள்ளது தமிழீழ விளையாட்டுத்துறை. □

# சுனாமி அனர்த்த புனரமைப்புத் தொடர்பாக அரசிடம் தெளிவான கொள்கை வேண்டும்

## –உலகவங்கி வலியுறுத்து

ஆழிப்பேரலையின் பின்னரான புனரமைப்புத் தொடர்பில் தெளிவான தேசியக் கொள்கையை அரசாங்கம் கொண்டிருக்கவேண்டுமென உலக வங்கி பரிந்துரை செய்துள்ளது.

உலக வங்கியால் வெளியிடப்பட்டுள்ள குறிப்பு ஒன்றில் மாவட்டங்களில் இருந்து முறையான தொடர்புகள், ஆழிப்பேரலையின் பின்னரான புனர்நிர்மாணப் பணிகளின் பன்முகத்தன்மை,நடை முறைப்படுத்தல் ஆகிய விடயங்களிலேயே இந்தத் தேசியக் கொள்கை தேவையென உலக வங்கி தமது குறிப்பில் தெரிவித்துள்ளது.

ஆழிப்பேரலையின் பின்னர் அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள டெப்ரன் அமைப்பின் கொள்கைகளில் தெளிவு அவசியமானதாகும்.

இதில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்கு குறித்தும் தெளிவான அம்சங்கள் இடம்பெறவேண்டும் என்றும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் தொழில்நுட்ப விடயங்கள் குறித்தும் அரசாங்கத்திடம் கொள்கை இருக்கவேண்டுமென உலக வங்கி தெரிவித்துள்ளது.

இதேவேளை உலக வங்கியின் குறிப்பின்படி ஆழிப்பேரலையின் பின்னரான புனர்அமைப்புக்களுக்காக கிழக்குக்கு மாத்திரம் 41.1 வீத நிதி தேவையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கிற்கு 17.2 வீத நிதியுதவி தேவையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் அச்சுறுத்தல் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் - ஆன் கூப்பர்

(நியூயோர்க்)

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்து கவனம் செலுத்தப்படவேண்டுமென நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்புத் தெரிவித்துள்ளது.

பிரபல ஊடகவியலாளர் டி.சிவராமின் கொலைக்கு உரிமை கோரியுள்ள தேசபுத்தாபய என்னும் இயக்கம் ஏனைய சில ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்துள்ளது. இவ்வாறான கொலை அச்சுறுத்தல்கள் குறித்து கவனமாகச் செயற்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ள ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பின் பணிப்பாளர் ஆன் கூப்பர், இந்தக் கொலை அச்சுறுத்தல்களை மேற்கொள்வோருக்கெதிராக நடவடிக்கையெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன் வரவேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான கொலை முயற்சியால் இலங்கையிலுள்ள ஊடகவியலாளர்கள் பெரும் பதற்றமடைந்திருப் பதாகவும், பல ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருப்பதாகவும் ஊடகவிய லாளர்களைப் பாதுகாக் கும் அமைப்பின் பணிப்பாளர் ஆன் கூப்பர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நாட்டில் அரசாங்கங்கள் செயற்படுகின்றன மக்கள் தொடர்பில் அவற்றுக்கு கரிசனையில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

நாட்டில் மூன்று அரசாங்கங்கள் செயற்பட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசாங்கம் மற்றும் ஜே.வி.பி யின் தலைமையிலான அரசாங்கங்களே அவை என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வெலிமடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது சனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்று அவர் உரையாற்றினார்.

குறிப்பிட்ட மூன்று அரசாங்கங்களும் தமது அதிகாரத்தை காப்பாற்றிக்கொள்ளவே முயன்று வருகின்றன.

மக்கள் தொடர்பில் அவை கரிசனையையும் கொண்டிருக்கவில்லை. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஐக்கிய தேசியக் கட்சி எப்போதாவது பொய் கூறியதில்லை என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்கள் தமது பதவிகளைக் காப்பற்றிக் கொள்வதற்காக முயன்று கொண்டிருக்கும் நிலையில் மக்கள் பணவீக்கத்தின் அழுத்தங்களுக்குள் உட்பட்டு வருகின்றனர் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (32)

# சொகுசு வாகனம் வழங்க அரசாங்கம் அங்கீகாரம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப்படுவதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன் படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் 23ஆயிரம் டொலர் பெறுமதியான வாகனத்தை பெறவுள்ளார்

இந்த நிலையில் சுமார் 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் 40 ஆயிரம் டொலர்கள் பெறுமதியான வாகனங்கள் தேவையென வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறிலங்கா–பாகிஸ்தான் தடையில்லா வர்த்தக ஒப்பந்தம்

(கொழும்பு)

சிறிலங்காவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே அடுத்த மாதம் முதல் தடையில்லா வர்த்தக ஒப்பந்தம் அமுலுக்கு வருகிறது.

சிறிலங்கா-பாகிஸ்தானிய பொருளாதார ஆணைக்குழுவின் ஒன்பதாவது கூட்டம் இஸ்லாமாபாத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டது. அடுத்த மாதம் 12ஆம் திகதி முதல் ஒப்பந்தம் அமுலுக்கு வருகிறது. இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான ஆவணங்களை பாகிஸ்தானிய வர்த்தக அமைச்சர் ஹுமாயூன் அக்தர்கான் மற்றும் சிறிலங்கா வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் பரிமாறிக் கொண்டனர். மேலும் தகவல் தொழில்நுட்பம், மனித வள மேம்பாடு, கல்வித் துறைகளிலும் இருதரப்பு உறவை வலுப்படுத்த இருநாடுகளும் முடிவு செய்துள்ளன.

# பொதுக்கட்டமைப்பை எதிர்த்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பௌத்த சம்மேளன சங்கம் சுனாமிப் பொதுக்கட்டமைப்பை எதிர்த்து நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளது.

சுனாமிப் பொதுக் கட்டமைப்பிற்கு எதிர்ப்புக் கருத்துக்களை வெளிட்டுள்ளதுடன் தமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றினை சிறிலங்கா பிரதமர் மகிந்தராஜபக்ஷவிடம் கையளித்ததாகவும் தெரிகிறது.

சுனாமிப் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுமானால் திருகோணமலை மாவட்டத்திலுள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயங்கள் அபிவிருத்தி செய்தல் என்ற போர்வையில் புலிகளிடம் சென்று விடுமென அச்சம் வெளியிட்டுள்ள அவ் அமைப்பு, சுனாமி பொதுக் கட்டமைப்பிற்கு தமது கடும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது. (32)

# பதில் தியவதன நிலமேயிடம் தலதா மாளிகை திறப்புக்கள் ஒப்படைப்பு

(கொழும்பு)

கண்டி தலதாமாளிகையின் திறப்புக்கள் நேற்று முன்தினம் பௌத்த விவகார ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்றுள்ள தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன நண்பகல் 12.30 மணிக்கு தலதா மாளிகையில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்தில், பௌத்த விவகார ஆணையாளரிடம் கையளித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அஸ்கிரிய, மல்வத்த பீடங்களைச் சேர்ந்த தேரர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

பின்னர் கண்டி தலதாமாளிகையின் பதில் தியவதன நிலமேயாக நியமிக்கப்பட்டுள்ள றொஹான் பரணகமவிடம், பௌத்த விவகார ஆணையாளர் டபிள்யூ.டி. கனில் கையளித்துள்ளார்.

இதேவேளை பதில் தியவதன நிலமேயாக நியமிக்கப்பட்டுள்ள றொஹான் பரணகமவிடம் தலதா மாளிகையின் திறப்புக்களை கையளிக்குமாறு கோரி மல்வத்தபீட தேரர்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ வைப்பகம்

# பணிநிலை வேண்டுகை

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**பணிநிலை** :- அலுவலக உதவியாளர் தரம்–04
(சிற்றூழியர் தரம்–04 /Peon Grade–04)

**தகைமைகள்** :-
i. க.பொ.த.(சாதாரண தர)தேர்வில் கணிதம் 42/கணிதம் II, தமிழ் உட்பட 04 பாடங்களில ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
ii. ஆண்பாலார் மட்டும்.

**மாதாந்த ஊதியம்** :- $\frac{1,870-2,870}{50X20}+6,000$

**அகவை எல்லை** :- 18–25 வருடங்கள்

மேற்காட்டப்பட்ட பணிநிலைக்குத் தகுதியானவர்கள் தம்மால் தயாரிக்கப்பட்ட சுயவிளக்கங்களுடனும், கீழ்க்காட்டப்படும் ஆவணங்களுடனும் யாழ்சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பக நடுவப் பணியகத்திற்கு, 30.05.2005 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு வேண்டப்படுகின்றனர்.

01. கல்வித்தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

02.ஏனைய தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

03.ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்

04. நற்சாட்சிப் பத்திரங்கள்

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி.11967)

# காஞ்சிபுரம், கும்மிடிப்பூண்டி இடைத்தேர்தல்;

# அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றி

(காஞ்சிபுரம்)

இடைத்தேர்தல் நடந்த காஞ்சிபுரம்மற்றும் கும்மிடிப்பூண்டித் தொகுதிகளை அ.தி.மு.க கைப்பற்றி



வெற்றிச் சான்றிதழுடன் காஞ்சி அ.தி.மு.க..வேட்பாளர் மைதிலி திருநாவுக்கரசு.

விட்டது. காஞ்சிபுரம் தொகுதியில் அ.தி.மு.க வேட்பாளர் பத்தாயிரம் வாக்கு வித்தியாசத்திலும், கும்மிடிப்பூண்டியில் 25 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்திலும் வெற்றியீட்டியுள்ளனர்.

காஞ்சிபுரம்,கும்மிடிப்பூண்டி இடைத் தேர்தல்கள் கடந்த 14 ஆம் திகதி நடந்தது. காஞ்சிபுரத்தில் மைதிலி (அ.தி.மு.க), எம். குமார்(தி.மு.க) உள் ளிட்ட இருபது பேரும் , கும்டிப் பூண்டி யில் கே.எஸ் விஜயகுமார் (அ.தி. மு.க) வெங்கடாசலி (தி.மு.க) உள் ளிட்ட 16 பேரும் போட்டியிட்டனர் இந்தஇரு தேர்தல்களிலும் வழக் கத்தைவிட அதிக அளவு வாக்குகள் பதிவாகின. காஞ்சிபுரத்தில் 69.81 சதவீதமும், கும்மிடிப்பூண்டியில் 76.05 சதவீதமும் வாக்குகள் பதிவாகி இருப்பதாகத் தேர்தல் ஆணையம் அறிவித்தது.


இந்தநிலையில் நேற்றுக் காலையில் வாக்கு எண்ணும் பணி தொடங்கியது. காஞ்சிபுரம் வாக்குகள் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியிலும், கும்மிடிப்பூண்டி வாக்குகள் பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியிலும் பொலிஸ் பாதுகாப்புடன் வைக்கப் பட்டிருந்தன. பொலிஸ் பாதுகாப்புடன் வைக்கப்பட்டிருந்த இந்த



வாக்குப்பதிவு இயந்திரங்கள் காலையில் பலத்த பாதுகாப்புடன் உடைக்கப்பட்டன. அதன் பின்னர் வாக்குகள் எண்ணப்பட்டன.

காஞ்சிபுரத்தில் முதலில் முன்னணியில் இருந்த தி.மு.க, பின்னர் பின்தங்கியது. கடைசியாக பத்தாயிரத் திற்கும் அதிகமான வாக்குகள் பெற்றுக்காஞ்சிபுரத்தை மீண்டும் அ.தி. மு.க கைப்பற்றியது.

அதிக வாக்குப்பதிவு சதவீதம் காட்டப்பட்ட கும்மிடிப்பூண்டியில் தொடக்கம் முதலே அ.தி.மு.க முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப் பட்டது. கடைசி நிலவரப்படி 25 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அ.தி. மு.க தொகுதியைத் தக்க வைத்துக் கொண்டது.



இந்திய புதிய தலைமைத் தேர்தல் ஆணையாளராக பி.பி. தாண்டன் நேற்றுப்பதவி ஏற்றுள்ளார்.

# 100 வழக்குடன் சம்பந்தப்பட்டவர் தமிழகப் பொலிசாரால் கைது

(சென்னை)

நூறு வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட பிரபல கொள்ளைகளில் ஈடுபட்ட ஒருவரைத் தமிழகப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இவர் கடந்த எட்டு ஆண்டுகளாகத் தமிழகப்பொலிசாரின் பிடியில் சிக்காது தலைமறைவாக வாழ்ந்து வந்துள்ளார்.பவுல் என்ற இவர் பகல் நேரங்களில் மாறுவேடங்களில் ஒதுக்குப் புறமான வீடுகளைத் தேர்ந்தெடுத்து தங்குவார். அதன் பின்னர் இரவு நேரங்களில் கொள்ளையடிப்பதுதான் இவரது வழமையானதொழில்.

நெல்லை, தூத்துக்குடி,குமரி, விருதுநகர்,திருச்சி என தமிழகம் முழுவதும் பல மாவட்டங்களில் இவர் கைவரிசை காட்டாத இடங்களே இல்லை. கொள்ளையடித்த பணத்தில் அழகிகளுடன் உல்லாசமாக இருப்பதும், விதவிதமான வீடுகளை வாங்குவதும், சொகுசு வாழ்க்கை வாழ்வதுமே இவரது வாடிக்கையாகும். இவரது துணிகரக் கொள்ளைகளுக்கு கட்டிய மனைவியும், பெற்றதாயும் உதவிபுரிந்து வந்தனர்.

இந்தநிலையில் நெல்லை பொலிசாரால் தனக்கு ஆபத்து ஏற்படுமென உணர்ந்த இவர் கேரள மாநிலம் காஞ்சிபுரம் பள்ளியில் தஞ்சம் அடைந்தார். அங்கு பூட்டிய வீடுகளை உடைத்துக் கொள்ளையடித்துள்ளார்.

எட்டு ஆண்டுகளுக்குப் பின்பு பவுல் பதுங்கி இருக்கும் இடம்தொடர்பாக நெல்லை பொலிசாருக்குத் தகவல் கிடைத்தது. உடனே தனிப்படை பொலிசில் ஒரு பிரிவினர் சின்னமனூர் சென்று பவுலையும், அவனது குடும்பத்தையும் சுற்றி வளைத்துக் கைது செய்தனர்.

# ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சட்டசபைத் தேர்தலிலும் தொடரும்

## - வாசன்

(மதுரை)

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மக்கள் நம்பிக்கையைப் பெற்ற கூட்டணி ஆகும். சட்டசபைதேர்தலிலும் இக் கூட்டணி தொடரும் என தமிழக காங் கிரஸ் தலைவர் வாசன் தெரிவித்தார்.

வாக்குப்பதிவில் மின்னணு இயந்திரம் பயன்படுத்துவதை எதிர்த்து நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாக ஜெயலலிதா அறிவித்தார். இது வரைஅவர்வழக்குத் தொடரவில்லை. இருதொகுதிகளிலும் வாக்காளர்களை விலைக்கு வாங்க, கரன்சி மேளாவையே அ.தி.மு.க.வினர் அரங்கேற்றினர். அவற்றையும் மீறி தி.மு.க. வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இருபத்தைந்தாயிரம் கூட்டுறவு சங்ககங்களைக் கலைத்த அ.தி.மு.க. அரசு விரைவில் அவற்றிற்கு தேர்தல் நடக்கும் என அறிவித்தது. நான்கு ஆண்டுகளாகியும் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்தமறுக்கிறது. ஆறு மாவட்ட கூட்டுறவு நிறுவனங்கள் 400 தொடக்கவிவசாய கூட்டுறவு நிறுவனங்கள் மூடும் நிலையிலுள்ளன. வரும் சட்டசபை தேர்தலில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்றால் கூட்டுறவுச் சங்க தேர்தல்கள் நடத்தப்படும்.

மத்திய அரசு ஒதுக்கும் நிதியையும் அ.தி.மு.க. அரசு பஞ்சாயத்துகளுக்கு கொடுக்கத் தவறியதால் கிராம வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது.

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பதவியேற்று ஓராண்டு நிறைவடைகிறது காங்கிரஸ் சார்பில் மே 22முதல் 30 வரை ஓராண்டு சாதனைகள் குறித்து தெருமுனைக் கூட்டங்கள் பிரசார இயக்கங்கள் நடத்தப்படும்.

ஐக்கிய முற்போக்குக்கூட்டணி 100 சதவீதம் மக்கள் நம்பிக்கையைப் பெற்ற கூட்டணி. வரும் சட்டசபை தேர்தலிலும் இக்கூட்டணி தொடரும். சட்டசபை தேர்தல் எப்போது வந்தாலும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சந்திக்கத் தயாராகவுள்ளது.

பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி பஞ்சாயத்துகளில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென காங்கிரஸ் விரும்புகிறது. தற்போதைய பிரச்சினை மிகவும் உணர்வுபூர்வமானது. விளம்பரம் இல்லாமல் அனைத்துக் கட்சியினர் மற்றும் தலைவர்களும் பேசித் தீர்க்கவேண்டும். இதற்கான முயற்சிகளை காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் எடுத்து வருகிறேன் என வாசன் மேலும் கூறினார்.

# மணமகனுக்கு பிரியாணி இல்லை தாலிகட்டியதும் விவாகரத்து

(லக்னோ)

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவது என்று சொல்வார்கள். ஆனால் பிரியாணிக்காகத் திருமண உறவை முறித்தார் மணமகன். இந்தச் சம்பவம் உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடந்துள்ளது. பீலிபிட் மாவட்டத்தைச் சேர்ந்தவர் ரியாசுதீன். இவருக்கும் பானு என்ற பெண்ணுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் இவர்களுக்கு கோலாகலமாகத் திருமணம் நடந்தது. திருமணத்துக்கு வந்தவர்களுக்கு மதிய விருந்தாக பிரியாணி வழங்கப்பட்டது. மணமகனும், அவரது நண்பர்களும் பிரியாணி சாப்பிடப் போனார்கள். ஆனால் அவர்களுக்கு பிரியாணி இல்லை. அதற்குள் எல்லாம் தீர்ந்துவிட்டது.

உடனே மணமகன் ஆவேசம் அடைந்தார். எனக்குப் பிரியாணி இல்லாமல் திருமணமா? என்று கோபம் அடைந்த அவர் மணமகளின் பெற்றோரிடம் சண்டைபோட்டார். என்னை அவமானப்படுத்திவிட்டீர்கள் என்றார். அவரை சமாதானப்படுத்தினார்கள். பிரியாணி இல்லாவிட்டால் என்ன சாம்பார் சாதம் இருக்கிறது, சந்தோஷமாகச் சாப்பிடுங்கள்.மற்றதைப் பின்னர் பார்க்கலாம் என்றனர். சமாதானத்தை மணமகன் ஏற்கவில்லை. கழுத்தில் இருந்த மாலையைக் கழற்றிவீசிவிட்டு நண்பர்கள், உறவினர்களுடன் திருமண மண்டபத்தைவிட்டு வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து திருமணம் முறிந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. தாலி கட்டிவிட்டதால் சட்டப்படி விவகாரத்துச் செய்வோம் என்று மணமகனின் தந்தை தெரிவித்தார்.


# விற்பனைப்பிரதிநிதி தேவை

**கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்திற்கு கிளிநொச்சி மாவட்டத்திற்கான விற்பனைப் பிரதிநிதி ஒருவரும், உதவியாளர் ஒருவரும் தேவை.**

- **தகைமை:-க.பொ.த(சா/த) இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஆங்கில அறிவு ஓரளவு இருத்தல் வேண்டும்.**
- *வயது -18-30 வரை. பால் - ஆண்*

*நேர்முகத்தேர்வு 20-05-2005 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கீழ்காணும் முகவரிக்கு வருகை தரவும்.*

***தும்பிக்கையான் களஞ்சியம்,***
***இல-117,யாழ்சாலை, கிளிநொச்சி.***

(சி.11898)


## வரதட்சனைக் கொடுமை வழக்கில் பெண்பொலிசார் மனித உரிமை மீறல்

(சென்னை)

வரதட்சனைக் கொடுமை வழக்கு விசாரணையின்போது மனித உரிமை மீறியதாக குற்றம் சாட்டப்பட்ட பெண் பொலிஸ் இன்ஸ்பெக்டருக்கு ஒன்றரை இலட்சம்ரூபா நஷ்டஈடு செலுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

# சாவு அறிவித்தல்



## அம்பலம் கந்தையா சுந்தரம் (A.K.S)

(உரிமையாளர் A.K.S கமம் ,ந ஆம் வாய்க்கால் ,பரந்தன் A.K.S அரிசி ஆலை, A.K.S ரான்ஸ் போட், A.K.S மோட்டேர்ஸ்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்,வதிவிடமாகவும் கொண்ட அம்பலம் கந்தையா சுந்தரம் அவர்கள் (15.05.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா செல்லம் தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், செல்வலட்சுமி அவர்களின் அன்புக்கணவரும், சபாரத்தினம், துரைரத்தினம், இராசையா (உரிமையாளர் லக்சுமி அரிசி ஆலை, வவுனியா), நாகரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரனும், இராஜலிங்கம், பரமேஸ்வரன், சர்வேஸ்வரன், தயாழினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசநாயகி, சுபத்திரா, கேதீஸ்வரி, Dr.செந்தில் குமரன் (கொழும்பு ஜெயவர்த்தனபுர மருத்துவமனை) ஆகியோரின் மாமனும், காசிநாதர் (ESP), செல்வநாயகம் (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக்கல்லூரி), வைரவநாதன் (லண்டன்), வைத்தியநாதன், சண்முகநாதன், சிவபாக்கியம், பரமேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் பூங்கோதை, ஸ்ரீமதி, சுமதினி மற்றும் காலஞ்சென்ற பரமகுரு ஆகியோரின் மைத்துனரும், விஜயயாழினி, சுபேந்திரன் (லண்டன்), சுரேகன், நர்த்தனா கோகுலராஜ், கஸ்தூரி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.05.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*

***மனைவி,பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.***

*லட்சுமி வாசா,*
*கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி.*
*TP.0777-898338* (6138)

# ஐந்தாவது போட்டியையும் இழந்தது மே.தீவு
# தென்னாபிரிக்காவுக்கு சாதனை வெற்றி




மேற்கிந்தியத்தீவுகளில் நடை பெற்ற தென்னாபிரிக்கா- மேற்கிந் தியத்தீவுகள் அணிகளுக்கிடை யிலான இறுதி ஒரு நாள் போட்டி யிலும் தென்னாபிரிக்கா அணி ஏழு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்று அந்நாட்டில் முதன் முதலாக அந்த அணியை ஐந்து போட்டி களிலும் வென்ற சாதனைகளைப் பெற்றுள்ளது.

மழை காரணமாக 20 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத் தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 20 ஓவர்கள் முடிவில் ஏழு விக் கெட்டுக்களையிழந்து 138 ஓட்டங் களைப் பெற்றது.

அவ்வணியின் பிராவோ 41 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக் காதிருக்க ஆரம்ப வீரர்களாக கள மிறங்கிய கெய்ல்ஸ், சர்வான் ஆகி யோர் முறையே 28, 15 என்ற ஓட்டங் களைப் பெற்ற நிலையிலும், சந்தர் போல் ஒரு ஓட்டத்துடனும், லாறா 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். டெவன் ஸ்மித் 16 ஓட்டங்களைப் பெற்றார்.

தென்னாபிரிக்கா சார்பில் பந்து வீசிய அன்ரு நெல், அன்ரு ஹோல் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக் களையும், பொலக், ஒன்ரொங் இரு வரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் 139 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய தென்னாபிரிக்கா டிப்பன்னர் ஆட்ட மிழக்காது பெற்ற 61 ஓட்டங் களின் உதவியுடன் 19.1 ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை மட்டு மிழந்து 141 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

பந்து வீச்சில், பிராட்ஷோ கொலி




மோர், பிராவோ ஆகியோர் தலா ஒவ் வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இந்த வெற்றியுடன் தென்னா பிரிக்கா ஒரு நாள் தொடரை ஐந்துக்கு பூச்சியம் என்ற கணக்கிலும் டெஸ்ட் தொடரை இரண்டுக்கு பூச்சியம் என்ற ரீதியிலும் வென்று நாடு திரும்புகின்றது.

# நான் கிரிக்கெட்டை நேசிக்கிறேன்
# சினிமாவில் நடிக்கும் எண்ணம் இல்லை



அக்தர்

"கிரிக்கெட்டில் முழுக்கவனம் செலுத்துவேன். சினிமாவில் நடிக்கும் எண்ணம் இல்லை" என்று பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் சொகைப்அக்தர் மேற்கிந்தியத்தீவு சுற்றுப் பயணத்துக்கான பாகிஸ் தான் அணியில் இடம் பெறவில்லை.

உடல்தகுதியைக் காரணம் காட்டி அக்தர் அணியில் இருந்து கழற்றிவிடப்பட்டார். இந்த நிலையில் அக்தரை இந்திய சினிமாவில் நடிக்க வைக்க பிரபல படத்தயாரிப்பாளரும், டைரக்டரு மான மகேஷ்பட் முயற்சி எடுத்து வருகிறார். இதற்காக மகேஷ்பட் வரும் 21 ஆம் திகதி பாகிஸ்தான் செல்ல திட்டமிட்டு இருக்கிறார். இந்த நிலையில் சொகைப்அக்தர் சினிமாவில் நடிக்கும் வாய்ப்பை நிராகரித்துள்ளார். இது தொடர்பாக பாகிஸ்தான் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சொகைப்அக்தர் கூறி இருப்பதாவது

நான் கிரிக்கெட்டை நேசிக்கிறேன். அதில் கூடுதல் கவனம் செலுத்தி அணியில் இடம் பிடித்து கடைசிவரை கிரிக்கெட் ஆடவே விரும்புகிறேன். சினிமாவில் நடிக்கும் எண்ணம் எனக்கு இல்லை என்றார்.

# கவுண்டி அணியில் விளையாடுவதில் பதானுக்கு குழப்பம் நீடிக்கிறது



மிடில்சக்ஸ் கவுண்டி அணிக்காக இந்தியாவின் இர்பான் பதான் விளையாடுவதில் குழப்பம் நீடிக்கிறது.

இந்திய அணி வரும் ஓகஸ்டில் தான் இனிக்கிரிக்கெட் போட்டி களில் பங்கேற்கிறது. இந்த இடை வெளியில் பதான் இங்கிலாந்தின் பிரபல மிடில்சக்ஸ் கவுண்டி அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட் டுள்ளதாக செய்திகள் வெளியா யின. காயமடைந்த தென்னாபிரிக்க வீரர் நான்டி ஹேவர்டுக்குப் பதிலாக சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. பதானை போன்ற சர்வதேச தரம் வாய்ந்த பந்துவீச்சாளரை ஒப்பந்தம் செய்ததில் மகிழ்ச்சி அடைகிறோம் என்றார் மிடில்சக்ஸ் பயிற்சியாளர் ஜான் எம்பியுரி. இதனை பதான் உறுதி செய்யவில்லை. அதே நேரத்தில் மறுக்கவும் இல்லை. எனக்கு நிறைய வாய்ப் புக்கள் வந்துள்ளன. இது பற்றி வரும் செவ்வாய்க்கிழமை தெரிவிக்கிறேன் என்று நழுவினார். சிறந்த வேகப்பந்து வீச்சாளரான பதான் இதுவரை 13 டெஸ்டில் 45 விக்கெட் வீழ்த்தி யுள்ளார். 29 ஒரு நாள் போட்டியில் 47 விக்கெட் கைப் பற்றியுள்ளார்.

# பங்களாதேசத்துக்கு எதிரான இங்கிலாந்து அணி அறிவிப்பு

பங்களாதேசுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணி அறிவிக் கப்பட்டுள்ளது. பீட்டர்சன், ராபர்ட் கீ அணியில் இடம் பெறவில்லை. முதல் முறையாக இங்கிலாந்து அணி வங்கதேசத்துக்கு எதிராக விளையாடவுள்ளது. முதல் டெஸ்ட் லண்டனில் வரும் 26 இல் தொடங்குகிறது. இப்போட்டிக்கான இங்கிலாந்து அணியில் தென்னா பிரிக்க தொடரில் அசத்திய கெவின் பீட்டர்சன் இடம் பெறவில்லை. தவிர முன்னணி வீரரான ராபர்ட்கீ சேர்க்கப்படவில்லை. இவர்களுக்கு பதிலாக இயான் பெல், ஜோனாதன் லீவிஸ் இடம் பிடித்துள்ளனர். அணியின் நட்சத்திர வீரரான ஆன்ட்ரூ பிளின்டொப் காயம் குணமடைந்த நிலையில் அணிக்குத் திரும் பியுள்ளார்.

அணி: மைக்கேல்வோன் (தலைவர்) இயான்பெல், ஆன்ட்ரூபிளின்டொப், ஆஷ்லே கைல்ஸ், ஸ்டீபன் ஹார்மிசன், மாத்யூ ஹோகார்ட், ஜெரைன்ட், ஜோன்ஸ் சைமன், ஜோன்ஸ், லீவிஸ், ஆன்ட்ரூ ஸ்ரோஸ், கிரஹாம் தோர்ப், மார்கஜ் டிரஸ்கோதிக்.

# பயிற்சியாளரைத் தெரிவதில் நிதிப் பற்றாக்குறை இராது



அடுத்த பயிற்றுவிப்பாளரை தேர்ந்தெடுப்பதில் நிதிப்பற்றாக்குறை ஒரு தடையாக இருக்காது என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித் துள்ளது.

பி.பி.சி.யிடம் கிரிக்கெட் சபைத் தலைவர் ரன்பீர்சிங் கூறும் போது நல்ல ஒரு பயிற்சியாளரை தெரிவு செய்து அவரிடம் விபரங்களைக் கதைப்பதே முதல் பணி என்று தெரிவித்துள்ளார்.

பயிற்றுவிப்பாளராக அவுஸ்திரேலியாவின்அனுபவ வீரர் கிரேக்செப்பல், மேற்கிந்தியத்தீவுகளின் டெஸ்மன் கெய்ன்ஸ் இருவரும் கவனத்தில் இருப்ப தாகவும் சிங் தெரிவித்துள்ளார்.

# எம்டெல்மாஸ்டர்ஸ் செஸ்போட்டி இரண்டாவது இடத்தில் ஆனந்த்



எம்டெல் மாஸ்டர்ஸ் செஸ் சம்பி யன் போட்டியின் மூன்றாவது சுற்றை யும் சமன் செய்தார் இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த்.

பல்கேரியாவிலுள்ள சோபியா நகரில் சனிக்கிழமை இரவு நடை பெற்ற மூன்றாவது சுற்று ஆட்டத் தில் உக்ரைனின் ருஸ்லான் பொனோ மரோவ் உடன் சமன் கண்டார் ஆனந்த். இந்தப் போட்டியில் தொடர்ந்து மூன்று சுற்று ஆட்டங்களில் ஆனந்த் சமன் கண்டு வருகிறார்.

வெள்ளைக்காய்களுடன் ஆடிய ஆனந்த், சிறப்பான தொடக்கத்தில் இருந்தார். உக்ரைன் வீரரைவிட, வெற்றி வாய்ப்பு அவருக்கதிகம் இருந்தது. ஆனால் அதை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இதை சாதகமாக்கிக்கொண்ட உக்ரைன் வீரர் சிறந்த நகர்வுகள் மூலம் ஆனந்தின் சவாலை முறியடித்தார். ஒரு கட்டத்தில் தோல்வியின் விளிம்புக்கு ஆனந்த் சென்றார். ஆனால் சுதாகரித்து ஆடி புள்ளியைப் பகிர்ந்து கொண்டார்.

முன்னதாக முதல் சுற்றி பல் கேரிய வீரர் வாசெலின் துபலோவுடன் சமன்கண்டார் ஆனந்த். இரண்டாவது சுற்றில் ரஷ்யாவின் விளாதிமீர் கிராம்னிக்குடன் சமன் கண்டார்.



இத்தாலியில் நடந்த ரோம் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் சுவிற்சர்லாந்தின் பேட்டி ஸ்னேடர் 3-6,6-3,6-1 என்ற செட்களில் ரஷ்யா வின் மரியா ஷரபோபாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.



பிரெஞ் மோட்டார் கிராண்ட் பிரிக்ஸ் போட்டி நேற்று முன்தினம் லீ மென்ஸ் நகரில் நடந்தது. இதில் மின்னல் வேகத்தில் ஓட்டிய இத் தாலியின் வாலன்டினா ரோசி முதலிடம் பெற்றார். ஸ்பெயினின் செடி செபர்னு (15) இரண்டாவதாக வந்தார். வெற்றிப் பூரிப்பில் கையை உயர்த்தி மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறார் ரோசி.

# பெங்களூர் சர்வதேச மரதன் போட்டியில் இந்தியாவின் ராமு தங்கம் வென்றார்



பெங்களூர் சர்வதேச மரதன் ஓட்டத்தில் இந்தியாவின் ராமு தங்கம் வென்றார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட எத்தியோப்பிய வீரர்கள் ஏமாற்றமளித்தனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் சர்வதேச மரதன் ஓட்டம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் எத்தியோப்பி யாவைச் சேர்ந்த முன்னணி தடகள வீரர், வீராங்கனை கள், நமது பிரபலங்கள் உட்பட சுமார் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். முழு மரதன் (42.195 கி.மீ.) பாதி மரதன் (21.097 கி.மீ.) பிரபலங்களின் ஓட்டம் (ஏழு.கி.மீ) என மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடந்தன.

முழு மரதன் ஓட்டத்தில் எத்தியோப்பியா வீரர்களை முந்தி இந்தியாவின் ராமு முதலிடத் தைக் கைப்பற்றினார். புனேவைச் சேர்ந்த இவர் போட்டி தூரத்தை இரண்டு மணி நேரம் 23 நிமிடம் 46 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றார். எத்தியோப்பியாவைச் சேர்ந்த அபிபி சியோம் (இரண்டு மணி நேரம் 28.37 வினாடி), டிகாயி டெசல்க்னி (இரண்டு மணி நேரம் 33.10 வினாடி) முறையே இரண்டாம், மூன்றாம் இடம் பெற்றனர்.





# கழகங்களுக்கிடையிலான மரதன் ஓட்டப்போட்டி

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான 2005 ஆம் ஆண்டிற்கான விளையாட்டுப்போட்டிகளில் பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி நேற்று முன்தினம் அதிகாலை 6.30 மணிக்கு துணுக்காய் அரச அதிபர் நா.நந்தகுமார் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

பாலையடிச் சந்தியில் இருந்து ஆரம்பமான பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டி துணுக்காய்ச் செயலகத்தை வந்தடைந்தது. சி.சிவநந்தினி முதலாமிடத்தையும், ம.மாலினி இரண்டாம் இடத்தையும், ம.திலீபனா மூன்றாம் இடத்தையும் பெற்றனர். (24)

## சிந்தனைக்கு



விடுதலை வேண்டிநிற்கும் ஒரு தேசிய சமுதாயத்தின் உறுதிப்பாட்டை, எந்தவொரு சக்தியாலும் அழித்துவிட முடியாது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 17-05-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## உதவி வழங்குவோர் மாநாட்டின் பின்!

பொதுக்கட்டமைப்பிற்கு ஜே.வி.பி. இணக்கம் தெரிவிக்கும் வரை அதனை அமைப்பதில்லை எனச் சனாதிபதி சந்திரிகா தீர்மானித்திருப்பதாக வெளியாகியுள்ள தகவல்கள் ஆச்சரியத்திற்குரியதொன்றல்ல. சிலவேளைகளில் ஜே.வி.பியின் எதிர்ப்பையும் மீறிப் பொதுக்கட்டமைப்பை உருவாக்குவோம் என கண்டியில் உதவி வழங்குவோர் மாநாட்டில் சனாதிபதி சந்திரிகா கூறுவாரேயானால், அது ஓரளவு கவனத்தில் கொள்ளத்தக்கதாக இருக்கலாம். ஆனால், அதுகூட ஆச்சரியப்படுவதற்குரியதொன்றல்ல.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சில சமயங்களில் பொதுக்கட்டமைப்புக் குறித்துப் பேசுகையில், யார் எதிர்த்தாலும் கட்சியைவிட்டுப் போகட்டும் எனக் குறிப்பிட்டதுண்டு. ஆனால், ஜே.வி.பி. விரும்பினால் வெளியேறட்டும் என அவர் குறிப்பிடுவதில்லை. ஏனெனில், ஜே.வி.பியுடன் அவர் நேரடியாக முரண்பட்டுக் கொள்வது அரசாங்கத்திற்கு ஆபத்தானதாகும்.

சிலவேளைகளில், அவர் ஜே.வி.பி.யைத்தான் சுட்டிக்காட்டினாலும்கூட தனது பேசசிற்கு மறுப்பும், ஓரிரு தினங்களுக்குள் ஜே.வி.பி.யைச் சந்திக்கவும், பேச்சு நடத்தவும் அவர் தயார்ராகவே இருந்துள்ளார். பேச்சுக்களை நடத்தியும் உள்ளார். அதாவது, ஜே.வி.பி. அரசாங்கத்திற்கு எதிராகப் பேசுவதற்கு பதில் பேச்சுப் பேசுவதுபோல் பேசும் சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியுடன் முரண்பாட்டை கடைப்பிப்பதில்லை.

இந்த நிலையில், ஜே.வி.பியினரை எதிர்த்து அன்றி அவர்களின் விருப்பத்திற்கு மாறாகச் சனாதிபதி சந்திரிகா நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. இந்த நிலையில், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கம் அமுலாக்கம் என்பனவற்றிற்கு ஜே.வி.பியின் சம்மதம் இன்றி சனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளப்போவதில்லை என்பதை உறுதிபடக்கூறமுடியும்.

அண்மையில், உதவி வழங்கும் நாடுகளின் இராஜதந்திரிகளைச் சந்தித்து தமது அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து விளக்கிய சனாதிபதி சந்திரிகா அவர்களிடம் பொதுக்கட்டமைப்பை உருவாக்க இரண்டு வாரகால அவகாசத்தைக் கோரியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

ஆனால், உண்மையில், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரிய இக்கால அவகாசம் காலம் கடத்துவதற்கானதே ஒழிய பொதுக்கட்டமைப்புக் குறித்த இணக்கப்பாடு ஒன்றிற்கு வருவதற்கானதல்ல. ஏனெனில், விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுவதை ஜே.வி.பி நிச்சயமாக எதிர்க்கும், ஆட்சியைக் கவிழ்க்கத் தயங்கப்போவதில்லை என ஜே.வி.பி. ஏற்கனவே எச்சரித்துள்ளது.

அத்தோடு, பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியுடன் இணக்கப்பாடு ஒன்றிற்கு வரமுடியும் எனச் சனாதிபதி சந்திரிகா கூறுகின்றபோதும், நடைமுறையில் இவ்விடயத்தில் முன்னேற்றம் காண வாய்ப்பில்லை. ஏனெனில், பொதுக்கட்டமைப்புக் குறித்து ஜே.வி.பி. அரசாங்கத்துடன் விவாதிக்கத் தயாராக இல்லை. இந்நிலையில் ஜே.வி.பியை எவ்வாறு இணங்க வைக்க முடியும்?

ஆனால், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுக் கண்டியில் இடம்பெற்ற உதவி வழங்குவோர் மாநாட்டில் பேசிய விடயங்கள் இப்பந்தியில் எழுதும் வரையில் முழுஅளவில் எமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் பொதுக்கட்டமைப்புக் குறித்தும். புலிகளுடன் உடன்பாட்டிற்கு வருதல் குறித்தும் ஆதரவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளதாகவே அறியவருகிறது.

இருப்பினும், சனாதிபதி சந்திரிகாவின் இவ்வாக்குறுதிகள் யாவும் உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து நிதியுதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கானது மட்டுமே. அதற்கு அப்பால் சனாதிபதி சந்திரிகா ஒரு அடிதானும் கூட எடுத்து வைத்துவிடப்போவதில்லை. அத்தோடு, பொதுக்கட்டமைப்பு விவகாரம் நிதியுதவிக்கு தடையாகமாட்டாது என சில நாடுகள் உறுதி கூறியிருப்பதினால் சனாதிபதி சந்திரிகா வாக்குறுதி எதையும் அளிக்காது கூட இருக்கலாம்.

ஆனால், சர்வதேச நாடுகள், குறிப்பாக உதவி வழங்கும் நாடுகள், அமைப்புக்களிடம் பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவான நிலைப்பாடு இருப்பதன் காரணமாக- அவர்கள் அது குறித்த கேள்விகள், சந்தேகங்களை எழுப்பாது இருப்பதற்கும், அதனை உதவி வழங்கும் மாநாட்டில் விவாதத்திற்கு உள்ளாக்காமல் இருப்பதற்காகவுமே சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்புக் குறித்துப்பேசவேண்டியதேவை ஏற்படலாம் அவ்வாறு பேசினாலும் கூட உதவி வழங்குவோர் மாநாட்டு முடிவுடன் பொதுக்கட்டமைப்புக் குறித்த அவரது பேச்சும் முடிவிற்கு வந்துவிடும் எனத்துணிந்து கூற முடியும்.

# சனாதிபதி புலம்புவதை நிறுத்திவிட்டு துணிச்சலுடன் செயற்பட வேண்டும்!

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

(கொழும்பு)

அரசு கவிழ்ந்துவிடும் என்ற புலம்பல்களைச் சனாதிபதி சந்திரிகா நிறுத்திவிட்டு மிகுந்த துணிச்சலோடு பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்த முன்வரவேண்டும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.

சண்டேலீடர் பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இப்போட்டியின் ஒருபகுதி வருமாறு:-

**கேள்வி:** பொதுக்கட்டமைப்பை உருவாக்கினால் அரசு கவிழ்ந்து விடும் என்று அச்சப்படுவதாக சனாதிபதி சந்திரிகா கூறியுள்ளது குறித்து?

பதில்: இத்தகைய புலம்பல்களை சனாதிபதி நிறுத்திவிட்டு மிகுந்த துணிச்சலோடு பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்த முன்வர வேண்டும். நோர்வேத்தரப்பினாலும் எமது தரப்பினாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட முற்றிலும் மனிதாபிமான அடிப்படையிலானதே பொதுக்கட்டமைப்பு என்பது. ஆட்சிக் கவிழ்ப்பு போன்ற அறிக்கைகளை விடுப்பதை நிறுத்திவிட்டு பொதுக்கட்டமைப்பைச் செயலாக்கப்படுத்துவதில் தீவிர அக்கறை செலுத்த வேண்டும்.

**கேள்வி:** விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயார் என்று சனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார். ஒப்பந்தத்தில் கையெழுத்திட விடுதலைப்புலிகள் தயாரா?

பதில்: நோர்வேத் தரப்பினால் பொதுக்கட்டமைப்பு யோசனை முன்வைக்கப்பட்டபோதிருந்தே நாம் ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயார் என்றே கூறிவருகிறோம். ஆனால் அது குறித்து எதுவித நடைமுறையுமின்றி இப்படியே அவர் பேசி வருவதுதான் புரியவில்லை. இதுபோன்ற பேச்சுக்களை ஒவ்வொரு அனுசரணையாளர்களிடம் சொல்லி அனுப்புவதைவிட்டுவிட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அவர் அனுப்பி வைக்கட்டும். நாங்களும் கையெழுத்திடுகிறோம்.

**கேள்வி:** நோர்வேத்தரப்பு அளித்த பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உங்கள் கருத்து என்ன? இறுதி வரைவை நடைமுறைப்படுத்த நீங்கள் தயாரா?

பதில்: நோர்வேத்தரப்பினர் அளித்த வரைவில் சில விடயங்கள் நாம் சுட்டிக்காட்டியபோதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான தேவைகளைக் கருத்தில் கொண்டு நாம் அதை முழுமையாக ஏற்றுக்கொண்டதாக அறிவித்தோம். அரசுத்தரப்பும் ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டால் பொதுக்கட்டமைப்பைச் செயற்படுத்தலாம்.

**கேள்வி:** பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதன் மூலம் விடுதலைப்புலிகள் அங்கீகாரத்தைப் பெற்றுவிடுவார்கள் என்று ஜே.வி.பி குற்றம் சாட்டுகிறது. இதுகுறித்து அந்த மார்க்சிஸ்டுகளுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

பதில்: சில அடிப்படையான உண்மைகளை ஜே.வி.பியினர் புரிந்துகொள்ளாமல் கற்பனையாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமே தமிழீழத் தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் என்ற அங்கீகாரத்தை 2002 ஆம் ஆண்டு தேர்தலின்போதே அளித்தார்கள். சிறிலங்கா அரசும் தமிழர்களின் பிரதிநிதியாக தமிழீழ விடுதலைப் புலிகளை சமநிலையில் அங்கீகரித்திருக்கிறது. தமிழர்களின் பிரதிநிதி யார் என்பதைத் தமிழர்கள்தான் தீர்மானிக்க வேண்டுமே ஜே.வி.பி போன்ற சக்திகள் அல்ல. தமிழர் தாயகத்தின் 65 வீத பரப்பு எமது நிர்வாகத்தின் கீழ் இருக்கிறது. நாம் அதை ஆளுகை செய்து வருகிறோம். ஒரு அரசின் சகலவிதமான நடவடிக்கைகளையும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இப்பகுதியில் மேற்கொண்டு வருகிறது. அதுவே உண்மை.

இந்த உண்மையின் அடிப்படையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தமது பிரதிநிதிகளாக தமிழீழத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதுவே எமக்கு உண்மையான அங்கீகாரம். ஜே.வி.பி போன்ற சக்திகளிடமிருந்து எமக்கு அங்கீகாரம் தேவையில்லை.

கடந்த 25 ஆண்டுகாலம் நாம் எம் தமிழ்மக்களுக்காக யுத்தம் நடத்தி இருக்கிறோம். அதனால் இந்த அங்கீகாரம் ஏற்பட்டிருக்கிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கூட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும், சிறிலங்கா அரசிற்கும் இடையேதான். இது போன்ற யதார்த்தங்களிலிருந்து விலகி நின்று ஜே.வி.பி பேசுகிறது. இவற்றைப் புரிந்து கொள்ளாமல் ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது என்பது ஜே.வி.பி, யின் அரசியல் வளர்ச்சியில் எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாது.

**கேள்வி:** மே 17 ஆம் திகதிக்கு முன்னதாக பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று உங்கள் தரப்பு எதிர்பார்க்கிறதா?

பதில்: ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பொதுக்கட்டமைப்பு யோசனையை நோர்வேத்தரப்பு முன்வைத்த நாளிலிருந்தே நாங்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடக் காத்திருக்கிறோம். இன்று கூட நாங்கள் தயாராகவே இருக்கிறோம். அதேநேரத்தில் சனாதிபதி சந்திரிகா அதற்குத் தயாராக இல்லை என்பதையும் அறிவோம். இப்போது பந்து அவர் கையில்தான். எங்கள் கைகளில் இல்லை. மே 17 ஆம் திகதிக்காக நாங்கள் காத்திருக்கவில்லை. ஒவ்வொரு நாளுமே காத்திருக்கிறோம்.

**கேள்வி:** பொதுக்கட்டமைப்பை முஸ்லிம் கட்சிகள் எதிர்க்கிறார்கள். முஸ்லிம் சமூகத்தைக் காப்பாற்ற மாற்றுயோசனையை முன்வைக்க அரசிடம் கோரியிருக்கிறார்களே?

பதில்: பொதுக்கட்டமைப்பானது முஸ்லிம் மக்கள் வாழும் பகுதியையும் உள்ளடக்கியதே. பொதுக்கட்டமைப்பு யோசனையின் ஒவ்வொரு அம்சத்தையும் முஸ்லிம் தலைவர்கள் படித்துப் பார்த்துவிட்டு முஸ்லிம்கள் அபிலாசைகள் நிறைவேற்றப்படாமல் இருக்கிறதா என்பதை தெரியப்படுத்தட்டும். நாம் முஸ்லிம் சமூகத்திடம் இது குறித்து விவாதித்து அவர்களுக்குரிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவோம்.

**கேள்வி:** கருணா குழுவினர் முகாம் தொடர்பாக எமது பத்திரிகை (சண்டேலீடர்) புகைப்பட ஆதாரத்துடன் செய்தி வெளியிட்டது. ஆனால் அரசு உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை.. இது குறித்து?

பதில்: யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மிகவும் சிக்கலுக்குள்ளாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசு செயற்பட்டு வருகிறது. அப்படியான முகாம்கள் அமைத்தது முழுமையான யுத்த நிறுத்த மீறலே. நாம் சூழலை அவதானித்தே வருகிறோம். அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதங்களை எந்தக் குழுவினரும் வைத்திருக்கக் கூடாது. என்பது யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துகளில் ஒன்று. கருணா குழு என்ற பெயரில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுக்கள் பலவற்றை அரசு தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் நடமாட அனுமதித்திருக்கிறது. அரசு யுத்த நிறுத்தத்தை மிகவும் சிக்கலான நிலைக்குத் தள்ளியிருக்கிறது என்பதே எங்கள் நிலை.

**கேள்வி:** பொதுக்கட்டமைப்பிற்கு மாற்று யோசனையை முன்வைக்க உள்ளதாக ஜே.வி.பி சொல்கிறது. நீங்கள் பரிசீலிக்கத் தயாரா?

பதில்: ஆழிப்பேரலையால் வடக்கிலும், கிழக்கிலும் தமிழ்மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு மனிதாபிமான உதவிகளுக்காக எதிர்பார்த்திருக்கிறார்கள். நான்கு மாதங்கள் இப்படியான நிலை நீடிக்கிறது. தற்போது ஜே.வி.பி மாற்றுத்திட்டம் குறித்துப் பேசுவது நகைத்தலுக்குரியது.

**கேள்வி:** விடுதலைப்புலிகளை விட சிவராம் தாரக்கியை விட சண்டே லீடர்' ஆசிரியர் மோசமான தீவிரவாதி என்று ஜே.வி.பி யின் பரப்புரைச் செயலர் விமல் வீரவன்ச கூறியுள்ளது குறித்து?

பதில்: ஜே.வி.பி யானது குறிப்பாக விமல் வீரவன்ச, அமைதி முயற்சியை ஆதரிக்கும் அனைத்துத் தரப்பினரையும் மிகக்கடுமையாக எதிர்க்கிறார். சண்டே லீடர் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க விமல் வீரவன்சவின் பேச்சுக்காகக் கவலைப்படத் தேவையில்லை. தமிழர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பவர்களை கொடிய குற்றவாளிகளாகவே ஜே.வி.பி பார்க்கிறது. இதனால் ஜே.வி.பி யின் பேச்சுகளை புறந்தள்ளிவிட்டு வேறு பணிகளில் அவர் தன் கவனத்தைச் செலுத்தலாம்.

# சுனாமி நிவாரண நிதி பயன்படுத்தலில் அரச, அ.சா.நி இணைந்து செயற்பட வேண்டும்

## அமெ.முன்னாள் சனாதிபதி கிளிண்டன்

சுனாமி நிவாரண நிதிகளை, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தும்போது, அரச நிறுவனங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும், புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டுமென முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில் கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

தனியார் நிறுவனங்களும், அரச சார்பற்ற அமைப்புக்களினதும் பங்களிப்புப் பாரியது என சுட்டிக்காட்டிய சனாதிபதி, அவர்களிடம் எதிர்பார்க்கும் சேவைகள் அளப்பரியது எனத் தெரிவித்தார்.

நேற்று ஆரம்பமான உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டுடன் செய்மதி தொழில் நுட்பத்தின் உதவியுடன் இணைந்து கொண்ட முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில் கிளிண்டன் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்;

இதுபோன்ற அனர்த்தங்கள் இடம்பெறும்போது அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். நிவாரணங்களைப் பகிர்ந்தளிப்பதையோ, மீளக்கட்டி எழுப்பும் நடவடிக்கைகளையோ, அரசாங்கத்தால் மட்டும் செயற்படுத்துவது இயலாத காரியம். ஆகவே, சகலதரப்பினரும் இணைந்தே செயல்பட வேண்டும். அரச அமைப்புக்களும், அரச சார்பற்ற அமைப்புக்களும் பொதுவான ஒரு திட்டத்தின் கீழ் இணைந்து செயற்படுவது அதிக பலனைத் தரும் எனத் தெரிவித்துள்ளார் (32)

# கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தின் பின்பே தொண்டராசிரியர் நேர்முகப்பரீட்சை

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் கஷ்ரப்பிரதேச மற்றும் அதிக கஷ்ரப் பிரதேசங்களில் உள்ள பாடசாலை களில் தொண்டர் ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்களில் தகுதியானவர் களுக்கு நிரந்தர நியமனம் வழங்கு வதற்காக நடத்தப்பட்டு, தற்போது ஆளுநரின் உத்தரவினால் இடை நிறுத்தப்பட்டுள்ள நேர்முகப் பரீட் சைகள் மீண்டும் நடத்தப்படுவது மத் திய அரசாங்கத்தின் முடிவிலேயே தங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

கஷ்ரப் பிரதேச மற்றும் அதிக கஷ்ரப்பிரதேசங்களில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு என்றே இந்நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு வந்தன.

வசதியான பிரதேசங்களில் பணி புரியும் தொண்டர் ஆசிரியர்களும் தங் களுக்கும் ஒரே சமயத்தில் நேர்முகப் பரீட்சை நடத்தி நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று வற்புறுத் தியதை அடுத்தே, கஷ்ர மற்றும் அதிகஷ்ரப் பிரதேசங்களில் பணிபுரிந்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நடத் தப்பட்டுவந்த நேர்முகப்பரீட்சை இடை நிறுத்தப்பட்டது.

இதனால் கஷ்ர, அதிகஷ்ரப் பிர தேசங்களுடன் வசதியான பிர தேசங்களிலும் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய தாகக் கல்வி அமைச்சின் சுற்று நிரு பம் ஒன்று புதிதாக வெளியிடப்பட வேண்டும். அவ்வாறான சுற்று நிரு பம் அமைச்சரவையின் அங்கீகாரத் துடன் வெளியிடப்படவேண்டும். அவ் வாறு வெளியிடப்பட்டதன் பின்னரே வடக்குக் கிழக்கு பாடசாலைகளில் பணிபுரியும் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்படும் என்று மாகாணக் கல்வி அமைச்சு உயர்அதிகாரி ஒருவர் தெரி வித்தார். (25)

### – பொதுக்கட்டமைப்புக்கு எதிராக –

# கண்டி உதவி வழங்குவோர் மாநாட்டில் ஹெலஉறுமய பா.உ. கருத்து

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜாதிகஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் நேற்று நடைபெற்ற கண்டி மாநாட்டில் கருத்துத் தெரிவித்துள்ளார். மாநாட்டில் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா உரையாற்றிய பிறகு திடீரென எழுந்த ரத்ன தேரர், பேசத் தொடங்கினார். நாங்கள் ஆயுதம் ஏந்தவில்லை. எங்களது உணர்வினை நீங்கள் நிராகரிக்க மாட்டீர்கள் என நம்புகிறோம். சிறிலங்காவின் இறையாண்மை பேராபத்தில் இருக்கிறது. பொதுக்கட்டமைப்பின் மூலம் விடுதலைப்புலிகள் இயக்கம் சட்ட அங்கீகாரம் பெறுகிறது என்று கூறிவிட்டு துண்டறிக்கை ஒன்றை அவர் அனைத்து உறுப்பினரிடமும் விநியோகித்தார்.



மகஜர் வழங்கும் ஹெல உறுமய பா.உ.

## கிளிங்டன் விஜயம் செய்வார்

அமெரிக்காவின் முன்னாள் சனா திபதி பில்கிளிங்டன் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூது வர் ஜெப்றி லங்ஸ்டட், கடந்த வெள் ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக் கப்பட்ட ஆசிய நாடுகளில் இடம்பெற் றுவரும் புனர்நிர்மாணப் பணிகளை மேற்பார்வை செய்யும் நோக்கில் முன் னாள் அமெரிக்க சனாதிபதி பில் கிளிங்டன் வருகைதரவிருப்பதாக வும், இதன் ஒருகட்டமாக இந்த மாத இறுதியில் அவர் இலங்கைக்கு விஜ யம் மேற்கொள்ளுவாரெனவும் அமெ ரிக்கத்தூதுவர் ஜெப்றி லங்ஸ்டட் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்ளவிருந்த பில்கிளிங்டன் இறுதி நேரத்தில் கலந்துகொள்ளாமை இங்கு குறிப் பிடத்தக்கது. (ஊ)

### பொதுக்கட்டமைப்பு...

போராட்டம் முனைப்புப் பெற்றது. தமிழீழ விடு தலைப்புலிகள், புளொட் ரெலொ, ஈரோஸ் மற்றும் ஈ.பி ஆர். எல். எப். போன்ற அமைப்புக்கள் தமிழ்மக்களின் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டன. எனினும் ஜே.வி. பி யைப் போல அழிவுகளில் ஈடுபடவில்லை. இந்த நிலையில் இலங்கை அரசாங்கங்களின் மீது நம்பிக்கை கொள்ளாத தமிழர்கள் சந்திரிகா குமாரதுங்கவின் மீது மாத்திரம் எவ்வாறு நம்பிக்கை கொள்ள முடியும் என சந்திரிகா கேள்வி எழுப்பினார். பொதுக்கட்டமைப்பானது சமாதான முயற்சியின் ஒரு கட்டம் அல்ல. எனினும் அது சமாதானத்துக்கான வழியாக மாறும் வாய்ப்பு உள்ளது. 20 வருடங்களுக்குப் பின்னர் தமிழீழ விடு தலைப்புலிகள் இலங்கையின் இறைமைக்கு மதிப் பளிக்கும் வகையில் இந்தத் திட்டத்திற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இலங்கையின் இறைமையை ஏற்றுக்கொள்வதாக தமிழீழ விடுதலைப்புலிகள் தெரிவிக்காவிட்டாலும், அவர்களின் யோசனையை இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி அரசாங்கத்துடன் பணியாற்றுவது என்பது இலங்கையின் இறைமையை மீறாத செயலாகும். அத்துடன் முஸ்லிம் மற்றும் சிங்களவர்களுடன் இணைந்து சமாதானமாகச் செயலாற்ற முன்வந்தமையானது முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்குக் கிடைத்த வரப் பிரசாதமாகும். இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லை எனக்கூறுபவர்கள் யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டவர்களாவர். பொதுக் கட்டமைப்பானது மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட் டுள்ளது. தேசிய குழு, மாகாண குழு ,மாவட்ட குழு என்பனவே அவையாகும். இதில் மாவட்டக் குழுவே பிரதானமாகும். அதில் மாவட்டத்தின் அனைத்து இன பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க அதி காரிகள் விரும்பினால் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் அல்லது தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிப்பர். பொதுக் கட்டமைப்பானது சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் ஆறு மாவட்டங்களின் இரண்டு கிலோமீற்றர் பகுதியைப் புனரமைக்கும் நடவடிக்கையாகும். இந்த நிலையில் கிழக்கின் குறிப்பிட்ட மாவட்டக் குழுவில் தமிழர்கள் ஐவர் பிரதிநிதிகளாக இருப்பர். ஏனைய ...தைச் சேர்ந்தவர்கள் ஐவர் பிரதிநிதித்துவம் பெறுவர் வடக்கில் தமிழர்கள் பெரும்பான்மை பெறுவர். இதே வேளை பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் ஜே. வி .பி சுனாமியின் பின்னரான புனரமைப்புக்கு இரண்டு பில்லியன் டொலர்களைத் தேடித்தருமாக இருந்தால் அவர்களின் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்குமென சனாதிபதி தெரிவித்தார். தமிழீழ விடுதலைப்புலிகள் பொதுக்கட்ட மைப்பு விடயத்தில் இணக்கத்தைக் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி நோர்வேயின் ஊடாக அறிவித்ததும் பிரதமர் உட்பட்ட அமைச்சரவைக்கு முழுமையாக இல்லாவிட்டா லும் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக விளக்கம் அளித்த தாக சனாதிபதி குறிப்பிட்டார். மக்களைத் தூண்டும் வகை யில் வீரவசனங்களைப் பேசி வரும் பௌத்தபிக்குகளும் ஜே.வி.பி யும் அமெரிக்காவில் இருப்பது போல 18 வயதுக்கும் மேற்பட்ட தமது பிள்ளைகளைக் கட்டாய இராணுவப்பயிற்சிக்கு அனுப்பத் தயாராக உள்ளனரா? அதேநேரம் யுத்தம் ஒன்று முன்னெடுக்கப்படுமாக இருந்தால் 500 பில்லியன் ரூபா தேவை. அதனை இந்த இரண்டு கட்சிகளும் தேடித்தரத் தயாரா? என சனாதிபதி கேள்வி எழுப்பினார். அன்று இலங்கை, இந்திய ஒப்பந்தத்துக்கு ஆதரவளித்தமை காரணமாகவே தமது கணவரான விஜயகுமாரதுங்க ஐக்கிய தேசிய கட்சியினாலும் ஜே. வி .பி யாலும் கொல்லப்பட்டார். அதேபோலத் தாமும் சமாதான முயற்சிகளின் அடிப்படையில் சிங்கள இனவாதிகளால் கொல்லப்படலாம் என சனாதிபதி தெரி வித்தார். சமாதான முயற்சிகளுக்கு நாட்டின் சனநாயகம் என்பது நூற்றுக்கு 51 சதவீதத்தினரின் அங்கீகாரமாகும். தற்சமயம் பொதுக்கட்டமைப்புக்கு 80 வீதமானோர் ஆதரவு தருகின்றனர். இந்தநிலையில் இந்தப் பொதுக்கட்டமைப்பு மற்றும் சமாதான முயற்சிகளை எவ்வாறு நடைமுறைப் படுத்துவது என்பது தொடர்பாக விரைவில் தெரியப்படுத்து வதாக சனாதிபதி தமது செவ்வியின் இறுதியில் தெரி வித்தார். (32)

### திருமலை...

ஈடுபட்டுள்ள ஜே.வி.பி. வன்முறைக் கும்பலின் பின்ன ணியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பௌத்த மதத்தின் பேரால் திருகோணமலையில் நடைபெறும் எந்தவொரு காட்டுமிராண்டித் தனத்தையும் அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ள அந்த அறிக்கையில் தாம் பௌத்த தர்மத்திற்கோ, பௌத்த மதத்திற்கோ எதிரானவர்கள் அல்ல எனவும் தமிழ் பேரவையின் தலைவர் தெரிவித்துள்ளார். (32)

# வீரவணக்கக் கூட்டமும் நினைவுக்கல் திரைநீக்கமும்

1995 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 28 ஆம் திகதி யாழ்மாவட்டத் தில் நடந்த சூரியகதிர் இராணுவ நடவடிக்கையின்போது வீரச்சாவ டைந்த மாவீர் வீ.வே. சின்ன அழூர் தன் (பொன்னுத்துரை.ஜெயகரன் நாவர் குழி, யாழ்ப்பாணம். த.மு.அறிவியல் நகர், கிளிநொச்சி.) என்னும் மாவீ வின் திருவுருவப்படம் நாளை அவரது தற்காலிக இல்லத் தில் மக்கள் வணக்கத்திற்காக வைக் கப்பட்டு நாளை மறுதினம் காலை ஒன்பது மணிக்கு கிளியாரதிபுரம் மகா வித்தியால யத்தில் இறுதி வீரவணக் கக் கூட்டம் இடம்பெறும் கொடிகாமம் மாவீர் துயிலும் இல்லத்தில் நடுகல் திரை நீக்கம் நடைபெறும்.

# ஊடகவியலாளர் கொலைகள் குறித்து சிறிலங்கா அரசாங்கம் அலட்சியம்

### - உதவி வழங்குவோர் மாநாட்டில் முறையீட்டு மனு

சிறிலங்காவில் கொல்லப் படுகின்ற தமிழ் மற்றும் சிங்கள ஊடகவியலாளர் தொடர்பான விட யங்களில் சிறிலங்கா அரசு அலட் சியம் காட்டிவருவதாக கண்டி உதவி வழங்கும் மாநாட்டில் பங்கேற்ற சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடம் முறையீட்டு மனு அறிவிக்கப்பட் டுள்ளது. ஊடகவியலாளருக்கான முன்னணி என்ற அமைப்பு இம் மனுவை அறிவித்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது; கடந்த நான்கு ஆண்டுகளில் சிவராம் தராக்கி, மயில் வாகனம் நிமலராஜன், ஐயாத்துறை நடேசன்,றோகண குமார, அற்புதன் அந்தோனி மரியநாயகம் ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர் இதுதொடர் பான வழக்குகளில் ஒருவர் கூட அடையாளம் காணப்பட்டு விசாரணை நடத்தப்படவில்லை. இதைச் சர் வதேச சமூகம் வெளிப்படையாகக் கண்டனம் செய்ய வேண்டுகிறோம்.

தற்போது நடைபெறும் இம் மாநாடு ஆழிப்பேரலை மீளமைப்புத் தொடர்பானதாக இருந்தாலும், பத்திரி கைச் சுதந்திரம் தொடர்பாக விவா திக்கப்படவேண்டும் என அதில் வலி யுறுத்தப்பட்டுள்ளது.

அரச தரப்புடன் கருணா குழு இணைந்த சூழலில் இராணுவ ஆய் வுக்கட்டுரைகளைத் தீவிரமாக எழுதிவந்த சிவராம் சுட்டுக்கொல்லப் பட்டார். அவரது கொலை தொடர்பாக உரிய விசாரணை நடத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண் டும் எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

# ஆசிரியர் சேவை I ஆம் தரத்திற்கு போட்டிப் பரீட்சை இல்லை

(கொழும்பு)

ஆசிரியர் சேவை முதலாந் தரத் திற்கான போட்டிப் பரீட்சைகளை நடத்தும் நடைமுறை உடனடியாக இரத்துச் செய்யப்படுமென இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கப் பொதுச் செயலாளர் சமிந்த ஜயசிங்க கூறியுள் ளார்.

நேற்றுக் கொழும்பில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்இவ்வாறு கூறினார்.

ஆசிரியர் சேவைகள் பதவிஉயர் வுகளில் நிலவும் நெருக்கடிகளைத் தீர்த்து ஆசிரியர் யாப்பை நடை முறைப்படுத்தப்போவதாகவும், இதன் பிரகாரம் ஆசிரியர் சேவையின் முத லாம் தரத்திற்கான போட்டிப் பரீட்சை களை நடத்தும் நடைமுறை உடனடி யாக இரத்துச் செய்யப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு டிசம் பர் வரை சேவையாற்றியோருக்கு நிபந்தனைகளின்றி பதவி உயர்வு களை வழங்க வழிவகுக்கும் சுற்ற றிக்கையை வெளியிடுமாறும் அவர் கேட்டுள்ளார்.

2006 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆசிரியர்களுக்கான யாப்பிற்கு அமைய பதவி உயர்வுகளை வழங் குவதற்கு நடவடிக்கை எடுக்கப்போவ தாகவும் அவர் மேலும் கூறினார்.

# தற்காலிக இடமாற்றம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்டச் செயலகம் புதுக்குடியிருப்பிலிருந்து பேராற்றில் இருக்கும் தாமரை செங்கல் உற்பத்தி நிலைய கட்டடத் திற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென பொருண்மிய செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

### 220 கோடி....

இதேவேளை சுனாமியால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களைக் கட்டி யெழுப்பி மக்கள் வாழ்க்கையில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அமுல்படுத்தும் திட்டங் களைச் சர்வதேச சமூகம் அங்கீகரித் துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதுகுறித்து நிதியமைச்சின் செய லாளர் கலாநிதி பி.வி.ஜயசுந்தர கூறுகையில், மூன்றாக வகைப்படுத் தக் கூடிய நன்கொடைச் சமூகம் 222 கோடி டொலர்களை வழங்கிப் பங்களிப்புச்செய்ய முன்வந்திருப்ப தாகவும் இந்த உறுதி மொழிகள் விரைவில் நிறைவேற்றப்படுமெனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

### வீரவணக்கம்...

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின் றனர்.

### சனாதிபதி....

கட்டமைப்பை நடைமுறைப்படுத்தாமல் தொடர்ந்து அது குறித்து அறிக்கைகளை மட்டுமே ஏன் வெளியிட வேண்டும்?

உண்மையில் அக்கறை இருப்பின் ஆழிப்பேரலை தாக்கி நான்கு மாதங்கள் கடந்த நிலையில் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தோடு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பார்கள். ஆகையால் ஆழிப்பேரலைக்குப் பின்னைய மீளமைப்புப் பணிகளில் தீவிர அக்கறை கொண்டிருப்பதாக நாம் நினைக்கவில்லை.

**கேள்வி:** ஆழிப்பேரலை தாக்குதல் நிகழ்ந்து 5 மாதங்கள் கடந்த பின்பும் நிவாரணப் பகிர்வு நடைமுறைப்படுத்தாதற்கு என்ன காரணங்கள் என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:** சிறிலங்கா அரசதரப்பினர் இது விடயத்தில் நேர்மையாகவோ அக்கறையாகவோ இல்லை என்றே கருதுகிறோம். ஆழிப்பேரலைக்கு பின்னைய மீளமைப்புகள் என்பது ஒரு மனிதாபினான தேவை. இந்த மனி தாபிமானத் தேவைக்கான பொதுக்கட்டமைப்பைக் கூட அரசால் உருவாக்க முடியவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் இந்த மனிதாபிமானத் தேவைகள் குறித்து அரசுக்கு அக்கறையில்லை என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது எனத் தெரிவித்தார். (இப்பேட்டி 11 ஆம் பக்கத்தில்இடம்பெற்றுள்ளது)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது